உ

கடவுள் துணை.

யாகோபு அருளிச்செய்த

# வைத்திய சூஸ்திரம்

ாருய-ம்,

அதன் சுருக்கம் ருய-ம்.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

---

மதுரை வித்துவான்

தி. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:


மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] 1917. [அணா 10.



ரிஜிஸ்டர் காப்பிரைட்.

உ

கடவுள் துணை.

## யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# வைத்திய சாஸ்திரம் ௱௫௰

பருதிமதி உலகத்தைப் படைத்தோன் தன்னைப்-பதம்பணிந்து அனுதினமும் நினைவிற்பூண்டு, கருதியே தொழுதிறஞ்சி எந்நாளுந்தான் - கருணைவைத்து எண்ணூறு பாடிப்பின்பு, வருதிட்ட இரண்டுமுன் னூறுபாடி - வகையாகக் குருக்கிநூற் றைம்பதாக, உருதியாய் வகாரமெல்லா மிந்தநூலில் - உண்மையாய்ச் சொல்லி விட்டேன் யாகோபுதானே. (1)

சொல்லிவிட்டேன் கல்லுப்பு வெடியுப்போடு - சொற்பெரிய ரசபற்பந் தாரபற்பம், வல்லமையாய்ப் பாஷாண பற்பமோடு - வகைவகையாய்க் கட்டுகின்ற மார்க்கத்தோடு, கல்லான களங்கு கொண்டு செந்தூரங்கள் - கருத்துவைத்துக் கைபாக வரிசையாக, புல்லறிவாற் செய்பாகம் பாடினேன்பார் - போக்கான வாதிகளே புகலக்கேளே. (2)

புகலுகிறேன் உப்பைவிட்டோர்க் கில்லைவாதம்-பொன்செய்ய அறியார்கள் பிரட்டுவாதி, நகலுகிறோம் கண்டருக்குள் செம்பெடுக்கார் - நாட்டியே மதிபழுக்க நலமுமில்லை, வகுலுகிறேன் வாய்ப்பேச்சா லொன்றுமில்லை - வலுவில்லை சுடுவார்கள் வணக்கங்கெட்டோர், பகலுவார் பொன்கொடுத்தாற் செம்பாய்ச்செய்வார் - பக்தியில்லார்க் கொன்றுமில்லை பாரிலோர்க்கே. (3)

பாரிலே யிருக்கவென்றால் வாதம்வேணும் - பகரரிய செடமிருந்த அதிட்டத்தாலே, தூரிலே நீரேறில் மரமுமாகும் - தூரில்லா மரமாமோ தூக்கிப்பாரு, வேரிலே நீரிருந்தால் காயுங்காய்க்கும்-வில்லிருந்தால் அம்புதைக்கும் விதத்தைப்போல, ஆரிலே தூரிருந்தால் தெப்பம்வேணும் - அதைப்போலே உற்றுப்பா ரறிவாற்றானே. (4)

## உப்புக்கட்டு.

அறிவாக உப்பொன்று சொல்லக்கேளு - ஆடலாம் வெகு கோடி வித்தைதானும், குறியாக வாதமாம் பொன்னுமாகும் - குணக்கேடு சொன்னுக்கால் வாதமாமோ, சரியாக உப்பதுவுங் கட்டினுக்கால் - சாட்சியாஞ் சரக்கையெல்லாங் கட்டும்கட்டும், பரியாகு மென்றுசொன்ன யாகோ பென்பேர் - பார்த்துணர்ந்து பாரிலேதான் பகர்ந்திட்டேனே. (5)

பகர்ந்திட்டேன் கல்லுப்புப் படியுமொன்று-பழச்சாறு தன்னை விட்டு ஒட்டக்காய்ச்சி, வகர்ந்திட்டேன் மேனிச்சாறு விட்டரைத்து-வகையாகப் புடமொன்று போட்டெடுத்து; நகர்ந்திட்டு அருக் கன்பால் விட்டரைத்து-நல்லவில்லை பண்ணியபின் கதிரில்வைத்து, பிகர்ந்திட்டுக் காய்ந்தபின்பு புடமுமிட்டால் - பேரான கசிவிறந்து பிலக்கும்பாரே. (6)

பிலக்குகின்ற உப்பெடுத்துச் சேருமொன்று - பின்புதான் ரசபதங்கந் தன்னைத்தானும், நலக்குவேன் வெண்கருவா லரைத்து உண்டை - நலமாகப் பலமொன்று கதிரில்வைத்து, கலக்குமே ரசவுண்டை மேலேதானும் - கனிவாகக் கசிவத்த உப்பைக்கட்டும், துலக்குமே கரியோட்டில் வாட்டிக்கட்டு - தூப்பரவாய்க் கட்டிய பின் சொல்லக்கேளே. (7)

சொல்லவே கரியுப்புப் படியும்நாலு - சுருதிபெற ஒட்டி ரெட்டி மேனிச்சாறு, நல்லாக இடித்துப்பிழிந் துப்பில்விட்டு - நலமாகக் காய்ச்சிடவே தெரிப்படங்கும், மெல்லஅதைப் புட மிட்டு எடுத்துக்கொண்டு - மேன்மைபெறச் சட்டிரெண்டும் உரசிச் சேர்த்து, பொல்லாத உண்டைதனை நடுவேவைத்துப்-பின்புதான் மேனியுப்பை அதிலேபோடே. (8)

போட்டுநீ யமுழ்த்தியுமே மேலேசட்டி - போக்கோடே மூடி யபின் சொல்லக்கேளு, நாட்டுமே சீலைசெய்து வலுவாகத்தான், - நல்சட்டி அடுப்பேத்தி எரிப்புச்சாமம், நாட்டுமே உள்ளிருந்த பாதரசந்தானும் - நயமாகக் கவசித்த உப்புக்குள்ளே, விட்டுமே சொக்கியது குருவுமாகும் - வேதாந்தக் குருவாக விளங்கும்பாரே.

விளங்கவே சொக்காமல் மேலேயேறி - வீற்றிருந்தால் பழைய படி முன்சொன்னப்போல், தளங்கவே உண்டைசெய்து கவசங் கட்டி - தாட்டிகமாய்ப் பழையபடி யெரித்துத்தீரு, துளங்கவே யிப்படிக்கு உயரேறுமல் - தெர்குத்துமே உப்பிலே சொக்கிச்சென் றூல், புளங்கவே யெடுத்துவைத்துப் பூசைபண்ணு - புலம்பாதே யென்றுசொன்னர் யாகோபுதானே. (10)

என்றுமே செம்புதனிற் பத்துக்கொன்று - இதமாகக் கொடுத்தூதி வெள்ளியெட்டில், நன்றாக ரெண்டுயிடு எமமாகும் - நலமாகக் கொடுத்துருக்கிப் பார்க்கும்போது, அன்றுமே மாத்தாறு காணும்நல்ல - அடவாகப் பார்த்துமே செலவுசெய்து, தின்றுமே பின்னமொன்று சொல்லக்கேளு - திடமாக யாகோபு சொன்னவாறே. (11)

சொன்னதொரு முன்னெரித்த உப்புதன்னைச் - சுகமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு, நன்னயமாய்ப் பொன்போலே கண்விட்டாடும் - நலமாகக் கரியதுவுங் குடியாதப்பா, இன்னமொன்று சொல்லுகிறேன் குகையிலிட்டு - இதமாக நாலுருக்கிப் பின்புதானும், தன்னைப்போல் தங்கமது ஒன்றுதாக்கு - தங்கம்நின்று உருகையிலே நாகந்தானே. (12)

நாகந்தா னிடைபாரு தங்கத்துக்கு - நலமான களங்காகும் நாட்டுள்ளோர்க்கு, பாகமா யெடுத்துநீ சொல்லக்கேளு - பாய்ச்சிடுநீ ரவிநூற்றில் ஒன்றுதானும், வேகமாய்ப் பழுத்துவிடும் எடுத்துவித்து - விதமாக உண்டுடுத்திப் பின்புகேளு, நாகமாங் களங்கத்தைச் சேர்த்துருக்க - நன்மையாய்க் கூறுகிறேன் யாகோபு தானே. (13)

தன்மையாய்க் களங்கதுவுங் களஞ்சிலொன்று - தடைபறவே ரசபதங்கம் இடையுங்காலாம், உண்மையாய்க் கெந்தியது பலமுங்காலாம் - உறுதிபெறக் கல்வத்தி லிட்டுக்கேளு, வெண்மையா மேனிச்சாறு தன்னாலாட்டி - வித்தகனே காசியென்ற மேருக்கேற்றி, பண்மையாய்ப் பன்னிரண்டு சாமந்தானும் - பதியஎரி பின்புதான் பகரக்கேளே. (14)

பகரவே முருக்கம்பூப் போலேகாணும் - பகரப்போ காதெடுத்துப் பூசைபண்ணி, உகமையில்லாச் செந்தூரந் தன்னையப்பா - உரவான செம்பதிலே நூத்துக்கொன்றீய், பகரவே செந்தூரம் ஒன்றுபோட்டால் - பழமைபெற இருபத்து ஐந்துமாத்து, உகரவே வெள்ளியுந்தா னிடையேசேர்த்து - உருதிபெறத் துணிந்துநீ உன்றிடாயே. (15)

உண்ணவே பணவிடைதான் தேனிலுண்ண - உகாந்தவரை தேகமது கற்றாணுகும், கண்டுநீ மேனியது செவ்வலரிபோலாம் - கருத்துடனே புளியுப்பு எண்ணெய்தள்ளு, பண்டுமே மண்டலந்தான் உண்டுதேரு - பதினாறு வருஷம்போற் பாலையாகும், கொண்டுமே யாகோபு கூறினார்பார் - குவலயத்து வாதிக்குக் கூறினதே. (16)

கூறொண்ணு உப்பைமுந்திக் கட்டியாடும்-குவலயத்தில் பாஷாண மெல்லாங்கட்டும், வாரொண்ணு இரதமது ஏவல்கேட்கும் - வழியோடே உப்பைமுந்தித் தெரிப்படக்கி, பாரொண்ணுப் பார் தனிலே புடமுமிட்டு - பகர்ந்தவெடி யுப்பையிட்டுப் பரிந்துநல் லாச் சீரொண்ணுக் கைபாக வரிசையாகச் - செய்திட்டார் செய்தி யுமாந் தெரிந்துபாரே. (17)

வெள்ளி வித்தை.

தெளிந்துபா ரின்னமொரு வெள்ளிவித்தை - செப்புகிறேன் மார்க்கமதைத் திறமாய்ப்பாரு, வளிந்துமே வெள்ளையென்ற பாஷாணந்தான் - வகையாக ஒருசேரு வாங்கிவந்து, களிந்துமே வெள்ளாவி தன்னிலிட்டுக்-கசடகற்றிப் பின்னுமொரு கருத்தைக்கேளு, தளிந்துமே ரசபதங்கம் சேருவொன்று - தப்பாம விடைசமனாய்ச் சேர்த்துக்கொள்ளே. (18)

சேர்த்துமே வெண்கருவாற் சாமமாட்டித் - திரமாக உண்டை பண்ணிக் கதிரில்வைத்து; பார்த்துமே முன்னுப்புச் சேரிரண்டு - பதிலாக அருக்கன்பால் தன்னாலாட்டி, கார்த்திடவே உண்டைமேல் கவசங்கட்டிக்-கதிரில்வைத்து அனலில்காய்ச்ச யிருகிப்போகும், வார்த்திடவே யிருசட்டி உரசிச்சேர்த்து - வகையாக நடுவிவிடு உண்டைதானே. (19)

உண்டைவைத்து முன்னுப்புச் சுத்தும்கொட்டி - உறுதியாயமுழ்த்திநீ அடுப்பிலேற்றி, குண்டாக முச்சாம மெரித்துவாங்கிக்-குளிரவைத்துச் சட்டிதனைத் திறந்துபார்க்க, மூண்டையைப்போலேறியேதா னிருக்கும்பாரு - முடிவாகச் சுரண்டியே கல்வமிட்டு, கண்டிடாய் கள்ளியென்ற பாலேவிட்டுக்-கணக்காக யிருசாம மரைத்துக்கொள்ளே. (20)

அரைத்துததனைக் கதிரினிலே உண்டைசெய்து - அடவாக முன்னுண்டை கல்வத்திட்டு, இரைத்துஅரை முன்பாலாற் சாமம்நாலு-இதமாக அரைத்துவுண்டை போலேகட்டி, வரைத்துமே முன்சட்டி நடுவில்வைத்து-வளமாக முன்னுப்பு மரைத்துமூடி, கரைத்துமே முன்போலே மூடிநீயும் - கடுமையா யெரித்திடவே பாகமாமே. (21)

அண்டச் சுண்ணம்.

பாகமா யிப்படிக்கு ஏறஏற - பதிவாக யெரித்துமே பகரக்கேளு, பாகமாய் உப்பினுட கவசத்தோடே - பாங்காகச் சேர்த்துமே ஊடுருவிப்போகும், தாகமா யெடுத்துமே சாற்றக்கேளு - தடையறவே வெள்ளியம் சேருஒன்று, மோகமாய் முட்டையென்ற தோடுமொன்று - முடிவாக உவர்மண்ணு முடியவாங்கே. (22)

வாங்கியே சுண்ணாம்பு யிடையேசேர்த்து - வகையாகப் பாணியது ரட்டியிட்டு, தாங்கியே குமுரஎரி ஓடுதானும் - அதனிலுள்ள எண்ணெய்யது கழறும் நன்றாய், பாங்கியே அம்மியிட்டு வெண்கருவாலாட்டிப்-பரிவாக வில்லைசெய்து கதிரில்வைத்து, தாங்கியே திரியாமல் பெரும்புடமாய்ப்போடு - தொல்லுலகிற் கடுஞ்சுண்ணமாகும்பாரே. (23)

ஆகுமென்ற அண்டோடு சுண்ணந்தன்னை-அம்மியிட்டுச்சீனத்தைப் பொரித்துநீற்றி, வாகுபெற அண்டமென்ற சுண்ணம்ரெண்டு-வகையான சீனத்தின் பொரியுமொன்று, தாகுபெறச் சேர்த்திட்டு அண்டநீரால் - தனையரைத்து உண்டைபண்ணிக் கதிரில்வைத்து, பாகுபெறப் பெரியபுடம் போட்டுவாங்கில் - பதிவான சுண்ணாம்பு பாரிலோர்க்கே. (24)

பாரிலே அண்டமென்ற சுண்ணந்தன்னைப்-பதிவாகப் பொடியாக்கிச் சொல்லக்கேளு, வாரியே ஒருகுகையில் வெள்ளீயத்தை - வளமாக இட்டுமே மேலேதானும், காரியமாய் வெள்ளீயம் மேலேயிட்டுக்-கதியாக அதின்மேலே அண்டச்சுண்ணம், தாரியா யிட்டுமே உலையில்வைத்துத்-தாட்டிகமாய்க் குகைசிவக்க ஊதிப்போடே.

கொட்டிவிடு மருந்துகளை முன்போல்வைத்துக் - குணமாகக் குகைகருக்க ஊதிப்போடு, தீட்டியே யிப்படிக்கு ஊதஊத - திறமான நீரெல்லாம் யீயமாகும், மூட்டியே அதையெடுத்துத் தட்டிப்பார்க்க - மூவுலக மெச்சுமே சத்துமாகும், வாட்டியே வெள்ளீயம் கட்டும்நன்றாய்- வண்மைபெற யாகோபு கூறினாரே. (26)

வழுத்திடவே வெள்ளீயம் சேருவொன்று - வகையாகக் குகையினிலே வைத்துருக்கி, தழுத்திட்ட உப்பினாற் கட்டுகின்ற-தடையற்ற வெள்ளைப்பா ஷாணந்தன்னை, கழுத்துமே விராகனிடையொன்றுபோடு - காரணமாய் வெள்ளீயம் தோசைபோலே, இழுத்திட்டு உருகியுமே வெள்ளியாகும் - இன்பமா யாகோபு யியம்பும்வாரே. (27)

சொன்னதொரு கைபாக வரிசையாலே-சுருதிபெறும் யாகோபு செய்துஉண்டு, நன்னயமாய்ச் செய்தவர்கள் பிழைத்துப்போனார்- நான்கண்டு உலகத்தோர்க் காகச்சொன்னேன், இன்னபடி யிந்நூலைக் கண்டுதேரி - இதமாகச் செய்தாக்காற் பலனுமாகும், முன்னமே பாஷாணங் கட்டிநன்றாய் - முடிந்தமட்டும் வெள்ளிமுறை பார்த்திடாயே. (28)

பார்த்திடுமே இன்னமொரு வெள்ளியத்தை - பாடுகிறேன் புத்தியுள்ள அன்பருக்கு, எத்திடவே சொல்லுகிறேன் பாகமாக-ஏனையாம் வாதிமார் செய்குவார்கள், நாத்திடவே யிப்பாக மறிந்து கொள்ளு - நாட்டிலே சொல்லாதே நல்லதாகும், சாத்திவிட்டே னிந்நூலிற் பாகந்தன்னைச்-சரியாகப் பார்த்திட்டா லெல்லாமாமே.

ஆடுமே வெள்ளீயம் பலமும்பத்து - அந்திடைக்கு அரபொடி யும் பலமும்பத்து, தாடுமே இதுவிரண்டுங் குகையிலிட்டுத்-தப் பாம லுருக்கிடவே வெள்ளிபோலே, திடமாக நாடியே கல்வத் திட்டு - திணுக்கமா யதையுடைத்துக் கொடியோன்தன்னை, பாடு மே தான்சேர்த்து அரைத்துக்கொள்ளு - பண்பாக வெண்கருவா லரைத்து ஆட்டே. (30)

ஆட்டியே புடம்நாலு தேர்ந்தபின்பு - அதையெடுத்துச் சாரம் நாலி லொன்றுதாக்கு, சாட்டியே குகையிலிட்டு உருக்கித்தீரு - சரியாக அயக்கசடு நீங்கிநன்றாய், மூட்டியே தும்பைப்பூப் போ லாம்வெள்ளை-முறையாக யிருபத்தி ஐந்துமாத்து, தொட்டிடவே வெள்ளியிடை செம்புசேர்த்துத்-திடமாக உருக்கிடவுஞ் சொல்லக் கேளே. (31)

சொல்லவே முன்சொன்ன பாஷாணத்தைச்-சிறப்பாக விராக னிடை ஒன்றுயீய்ந்தால், வெல்லவே வெள்ளியது பத்துமாத்து - மேதினியோர் தன்னிடத்திற் சொல்லொணாது, கல்லவே சீவனத் துக் கிடமேபண்ணு - கதிபெறவே;உண்டுடுத்துக் கண்டிப்பாக, நல் லாக யிருந்துவிடு யாகோபுசொன்னார் - நலமாக யின்னமொரு வரி சைகேளே. (32)

வரிசையா யின்னமொரு வெள்ளிவேலை - வளமாகச் சொல்லு கிறே னன்புள்ளோர்க்கு, தரிசையாய் வெள்ளீயம் பலமோபத்து- தக்கதொரு அரபொடியும்பலமோபத்து, கரிசையா யிரண்டுமொ ன்று யுருக்கிக்கொண்டு - கலமான கல்வத்திற் கொட்டிக்கொண்டு புரிசையாய் வெள்ளையென்ற பாஷாணத்தைப் - போக்காகப் பலம் பத்து கூட்டிக்கொள்ளே. (33)

இட்டுமே பாணியினல் நேகஆட்டி - இதமாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு, நட்டுமே வெங்கலம்போ லுருகிநிற்கும் - நலமாக எடுத்துமே கல்வத்திட்டு, பட்டுமே காரீயம் பாதிசேர்த்துப் - பதி வாகப் பாணியின லரைத்துவில்லே, செட்டுமே செய்துநீ கதிரில் வைத்துச் - செயமாகப் பெரியபுடம் போட்டிடாயே. (34)

கொள்ளவே குகையிலிட்டுக் குமுரஊது - குகையாரி யெடுத்துப்பார் வெள்ளிபோலே, துள்ளவே ஓசையுடன் நிறத்தைக்கேளு- துடியாகத் தும்பைப்பூப் போலேயாகும், மெள்ளவே வெள்ளீய மதையெடுத்து - ஏகமாய்ச் சேர்த்துருக்க வெள்ளியாகும், உள்ளபடி சொன்னதிந்த வெள்ளிதன்னை - ஒழுங்காக வித்துமே உண்டிடாயே. (35)

உண்டிடவே வெள்ளிவித்தை யுண்மையாகும் - ஒருவருடன் சேராமற் செய்துகொள்ளு, கண்டிடவே ஒருவருக்குஞ் சொல்ல வேண்டாம் - காரியமாய்க் கவர்கோடி வேதைகோடி, உண்டிடவே இந்தவிதஞ் சீவனங்கள் - முக்கியமாய்ச் செய்துவிடச் சொன்னேன்பாரு, அண்டிடவே சீவனங்கள் பண்ணிக்கொண்டு - ஆண்டவனைத் துதிசெய்து அடுத்துவாழே. (36)

அடுத்துமே வாழ்வதற்கு மக்காநாட்டில் - அடவான நபிமார்கள் மெத்தவுண்டு, தொடுத்துமே அவர்களுக்கு வாதம்உண்டு - துடியான வெள்ளியுட வேலைசெய்வார் - குணமான மனக்காரர் அவரைக்கண்டு, தடுத்துமே பணிந்துகொண்டு நானேகற்றேன் - தடையில்லா யாகோபு சாதித்தேனே. (37)

சாதித்தேன் வடமொழியைக் கண்டுதேறி - சமத்தாக இசுலாத்தி லிருந்துகொண்டு, வாதித்தேன் பிசுமில்லா ரகிமானென்று - வளமாகத் தோத்திரமது மிகவும்பண்ணி, போதித்தேன் பதினெட்டுச் சித்தரோடே - புகலரிய அவர்களுடன் மலையிலேறி, கீர்த்திபெற யாகோபு யென்றபேரு-கீர்த்திபெற வசனித்தேன் !குணமிதாமே. (38)

குணமான வெள்ளிக்கு வெள்ளிவித்து - கூடினலப் பெண்ணுக்குப் பெண்ணேவித்து, பணமான பொன்னுக்குப் பொன்னேவித்து-பாய்ச்சுகிற துருசுக்குச் சுகமேவித்து, வனமான மாத்துக்கு மாத்தேவித்து-வடிவான மனதுக்கு ஆத்மாவித்து, தனமாக இவ்வாறே யெல்லாமாச்சு-தாட்டிகமா யாகோபு தான்சொன்னரே. ()

சொன்னதொரு வெள்ளிவித்தை ஒன்றுகேளு - சுருக்காகும் இவ்வேதை சூட்சமாகும், நன்னயமாய் முன்சொன்ன பாஷாணத்தை - நலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு, கன்னயமாய்க் கள்ளிப்பால் தன்னலாட்டிக்-கடுமைபெறயிருசாம மாட்டிப்பின்பு, வன்னமாய் வெள்ளீயம் பலமுமொன்று-வகையாகத் தகடடித்துப் பின்புகேளே. (40)

மருவுமே முன்னுரைத்த குருவுதன்னை-மார்க்கமாய் வெள்ளீயத் தகட்டிற்பூசி, கருகவுமே புடமதுவு மூன்றுபோடு-கன்னியமாய்த் தவளநிற மாகும்வெட்டை, அருகிலே வெள்ளீயங் கட்டிப்போகும் - அதையெடுத்துக் குருவாக வைத்துக்கொண்டு, கருதியே யெடுத்துமே முத்திபெற்ற - கர்த்தாவைப் பார்த்துரைத்தால் வெற்றியாமே. (41)

வெற்றியா யிருக்கவென்றால் வெள்ளிவித்தை - விரும்பியே வைத்துப்பார் விளக்கமாகும், முத்திதருங் கியானம்வரும் யோகமார்க்கம் - முனிவருக்கும் பெலனுக்கும் முத்தியுண்டு, சித்திதரும் உண்டுடுத்தி யிருக்கலாகும் - சீர்பெருகி யெல்லாமுஞ் சித்தியாகும், சத்தியமா யுழைத்தாக்கால் யெல்லாமுண்டு-சாத்தியமா யாகோபு தான்சொன்னரே. (42)

சொன்னதொரு சேருமூது பரம்படித்துச் - சொற்பெரிய விரைதெளித்து முளைத்துநிற்க, நன்னயமா யதைப்பிரித்து நட்டுப்பின்னே - நன்றாகக் களையெடுத்துப் பலன்கொடுக்க, உன்னதமா யொன்றுக்குப் பத்துநெல்லு - உன்னிதமாய்ப் பலன்கொடுத்த மார்க்கம்போலே, இன்னிலத்தில் ரசவாதம் நெல்லுப்போலாம்- இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (43)

இதமான வாதங்கள் வேணுமென்றால் - இதமான கல்லுப்பை யிருக்கிக்கட்டி, பதமான பாஷாணச் சரக்குமேலே - பதமாக்க் கட்டியே யெரித்துக்கொள்ளு, இதமாக இப்படிக்குக் கட்டுமாகும் - எனையாண்ட நபிமாரின் ஆட்டுஆட்டு, சாதகமாய் நான்கண்டு தேரினேன்பார் - சத்தியமா யாகோபு சொன்னேன் பாரே. (44)

சொன்னதொரு வெள்ளிதனைச் சிறக்கச்செய்து - சொகுசாக வித்துமே செலவுசெய்து, இன்னிலத்தில் எழுநூறு முடியப்பார்த்து - இதமாக இரண்டுமுன் னூறைப்பார்த்து, கன்னமதாயிந்தநூல் தன்னைப்பார்த்து - கருத்துறவே ஒருவேலை கண்டுகொண்டால், பன்னகமா யறிவாக யிருப்பீர்கண்டாய் - பாக்கியவான் யாகோபு பரிவாய்த்தானே. (45)

**உப்புக்கட்டு.**

பதிவாக உப்பொன்று பகரக்கேளு - பண்பாக யிந்தஉப்பு பெலனைப்பார்த்தால், பதிவான கல்லுப்புச் சேருநாலு - பலமான எலுமிச்சம் பழச்சாறுதன்னை, வதிலாகச் சேர்பத்து விட்டுஆட்டி- வடிவாகக் காய்ச்சிடவே கரைந்துநிற்கும், கதிவேறு யில்லாமல் சீலைதன்னைக்-கட்டியாய் வடிகட்டி ஓட்டக்காய்ச்சே. (46)

காய்ச்சியே கல்வமிட்டு அரைத்துக்கொள்ளு-கனிவாக நாயு ருவி சமூலம்வாங்கி, பாய்ச்சிஉர லதனிலிட்டு யிடித்துச்சாறு-பதி வாக வாங்கியே சீஷா தன்னில், வாச்சியே அடைத்திட்டு முன்னுப் பைக்கல்வம் - வகையாக இட்டுயிந்த நீராலாட்டி, தாச்சியே வருத் திட்டு கல்வத்திட்டு - தடையறவே புடம்போட்டு எடுத்துக்கொ ள்ளே. (47)

எடுத்துமே கல்வமிட்டு முன்னீராலே - எடுத்தெரித்து உமி நெருப்பில் வகுத்துப்போடு, அடுத்துமே வில்லைகட்டிக் கதிரில் வைத்து - அடவாகப் புடம்போடு யிப்படிக்கு, தடுத்துமே பே சாதே சுண்ணமாகும் - தடையறவே போட்டுமே தன்மையாக, விடுத்துமே கடுஞ்சுண்ண மாகுமட்டும் - விதமாகப் போட்டிடவே செயமுமாமே. (48)

செயமான கல்லுப்புச் சுண்ணமானல் - செல்வம்வரும் உபர சங்கள் சுண்ணமாகும், மயமான சரக்கெல்லாம் கெஞ்சிக்கட்டும்-மாயுகிற கருவென்ற உப்பினலே, நயமாகும் வங்கமது சுண்ண மாகும் - நானிலத்திற் சொன்னதொரு நேர்மைதன்னை, பயமாக உப்பைமுந்திக் கட்டிப்பாரு - பதிவாக,எல்லாமுஞ் சித்தியாமே. ()

வங்கச்செந்தூரம்.

சித்தியது வாகவென்ருல் கருவங்கத்தைச்-சீர்பெறவே சேர் தாக்கிக் கல்வத்திட்டு, நத்தியே நீநன்ருய்த் தட்டிக்கொண்டு - நயமான சுண்ணத்தால் நய்யஆட்டி, முத்தியாங் கல்லுப்புச் சுண்ணம்நேரே - முடிவாகப் போட்டுமே முச்சாமந்தான், பத்தி யாய் ஆட்டிவில்லை கதிரில்வைத்துப்-பதிவான யாகோபு பகர்ந்த வாரே. (50)

பகரவே பெரும்புடமாய்ப் போட்டுவாங்கிப்-பதிவாக எடுத்து மே கல்வத்திட்டு, நகரவே முன்சாற்ருல் நேகஆட்டி - நலமாக வில்லைதட்டிப் புடமும்போட்டு, தகரவே யிப்படிக்குப் புடமும் பத்து - தாட்டிகமாய் முன்போலே புடமுமிட்டு, வகரவே வங்கி மது செந்தூரமாமே - வகையாகக் கல்வமிட்டு மார்க்கங்கேளே. ()

மார்க்கமாய் வங்கமென்ற செந்தூரத்தில் - மலக்கமாய் நாலி ல்ரெண்டு வீரங்கூட்டி, ஆர்க்கமாய் முன்னீரா லறைத்துவில்லை-அடவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டால், ஏர்க்கவே வங்கமெ ன்ற ராகாதானும் - எத்தியே வைத்ததெல்லா மாண்டுபோகும், கார்க்கவே கல்வமிட்டு மடந்தைதன்னைக் - காரணமாய்ப் பாதிநீ சேர்த்துக்கொண்டு, வார்க்கவே முன்னீரால் சாமமாட்டி - வடி வாக மூன்கவசம் வலுக்கக்கேளே. (52)

வலுக்கவே சுண்ணாம்பு உப்புநேரே - வகையாகக் கட்டிக்கதிர் காயவைத்து, தளுக்கவே சேவலென்ற புடமுமிட்டால் - தான் வங்கஞ் சிவந்துமே குருவுமாகும், அழுத்தமா யிருக்குமந்தச் செந்தூரத்தை - அடவான ரவியுருக்கி நூற்றுக்கொன்று, பழுத் துமே தங்கமது வாகும்நேர்மை - பதிவான யாகோபு சொன்ன வாரே. (53)

சொன்னதொரு வங்கசெந் தூரம்வைத்துச் - சொற்பெரிய நபிமார்கள் மக்காதன்னில், நன்மையா யுண்டுடுத்தி வேதந்தன்னை - நாட்டியே படித்திடுவார் நல்லமார்க்கம், சின்னமில் லாமல்வெகு புத்தி யுள்ளோராய் - சீமானா யிருந்திடுவார் சிறியோரெல்லாம், முன்னமே வெகுநாளா யவ்விடமேபோனேன் -முத்திக்கு வழிசொ ன்னேன் யாகோபுநானே. (54)

நானென்ற நபிமார்கள் முன்னேதானும் - நாட்டிலே பேர் கொடுத்து வெகுநாள்த்தொண்டு, வானென்று மனமகிழ்ந்து ஒருநாட்சொன்னார் - வகையான கல்லுப்பின் வேதைமார்க்கம், கானென்ற தாம்புரத்தின் வேதைபோட்ட - கதையதனை யின்னா விற் கருதிச்சொன்னேன், பானென்ற கர்த்தாவின் நோக்கத்தா லே - பகர்ந்திட்டேன் யாகோபு பரிவாய்த்தானே. (55)

பரிவாகப் பாறையுப்புப் பலமும்பத்து - பாக்குப்போ லுடை த்துமே சொல்லக்கேளு, நரியான சுக்கான்கல் ஊதிநீயும் - நலமா ன பெருஞ்சட்டி பாதியிட்டு, பிரியான பாறையுப்பை யதின்மே ல்வைத்துப்-பின்புகற் சுண்ணமதை அதன்மேற்கொட்டி, துரித மா யமுழ்த்தியபின் அடுப்பிலேத்தித் - தொக்கனரி பனிரெண்டு சாமந்தானே. (56)

எரித்ததனை யெடுத்துப்பார் தெரிப்படங்கி -இதமாக நீர்வத்தி யிருக்கும்பாரு, வரிந்துமே யெடுத்ததனைக் கல்வத்திட்டு - வகை யாக எருக்கம்பால் தன்னிலாட்டி, பரிசதுமே வில்லைகட்டிக் கதி ரில்வைத்துப்-பலமாக புடம்போடக் கசிவுமாகும், நரித்துமே வா தரசம் எழுநூறுதன்னில் - நாட்டினே னதையெடுத்து நடப்புக் கேளே. (57)

கேளுமே லிங்கரசம் பலமும்பத்து - கெடியாகக் கல்வத்தி லி ட்டுநீயும், மாளவே அண்டவெள்ளைக் கருவாலாட்டி - வள மாக உண்டைபண்ணி மேலேகேளு, தாளுமே முன்சொன்ன உப்புதன்னைத்-தாட்டிமையாய் மேலேநீ கவசங்கட்டி, தூளுமே வலுவாக ஒட்டிரெட்டித்-துடியாகக் கட்டியே கதிரில்வையே. (58)

வைத்துமே கல்லுப்புப் படியும்ரெண்டு-வளமாக மேனிச்சாறு தன்னாலாட்டி, கைத்துமே புடமிரண்டு போட்டுக்கொள்ளு - கனமாகக் கட்டிவிடும் பின்புநேரு, பைத்துமே யிரண்டுசட்டி உரசிநல்லாப் - பதிவான உண்டைதனை நடுவேவைத்து, கைத்துமே மேனிச்சாறு புடமுநல்ல-கனிவாக உப்புமேற் சுத்திப்போடே.

போட்டுமே அமுழ்த்திநன்றாய் மேலேசட்டி - பொருக்கவே முடித்துமண் சிலைசெய்து, காட்டுமே அடுப்புதனி லேத்திநல்ல-கனிவாகப் பனிரெண்டு சாமந்தானும், வாட்டுமே யெரிவன்னிப் பதங்கந்தானும் - வளமான கவசத்திற் புகுந்துகொள்ளும், நட்டுமே மேற்சட்டி மல்லாத்திட்டு - நலமாய்ப்பார்த் திடவேதும் பைப்பூப்போலே. (60)

தும்பையென்ற பூப்போலே உயரநிற்கும் - துடியாகச் சுரண்டியதைக் கல்வத்திட்டு, வம்பாக வெண்கருவால் நேகஆட்டி-வளமாகக் கட்டிக்கதிர் காயவைத்து, நம்பிநபி அடிபோற்றிக் கவசங்கட்டி - நாட்டியே கதிர்தனிலே காயவைத்து, தம்பமாய் முன்போலே சுட்டிவிட்டுத் - தடையறவே முன்போலே சாற்றக்கேளே. (61)

சாற்றவே முன்போலே எரித்துவாங்கிச்-சரியாக ஏரஏர இப்படியேசெய்து, பாற்றவே வன்னியது கவசந்தன்னிற் - பதிந்துமே சொக்கியது யிறந்துபோகும், நாற்றவே சொக்கிநின்ற உப்புத்தன்னை - நாடியே கல்வமிட்டு எருக்கன்பாலால், போற்றவே வில்லைதட்டிக் காயவைத்துப்-பேரான யாகோபு பேசினாரே. (62)

பேசினார் ரவியுருக்கிப் ப்த்துக்கொன்று -புகலரிய உப்பதனைக் கொடுத்துப்பாரு, வாசியாம் பொன்போலே ரவியுமாகும் - வாட்டிவரக் காயிதனை வெள்ளியெட்டில், காசியா யிரண்டிட்டு ஊதிப்போட - கருணைபெற மாத்தாறு கண்டுகொள்ளு, தோசியாய்த் திரியாதே உன்னைப்பாரு - தொல்லுலகில் ரசவாதந் தோயுந்தானே. (63)

தோயுமே யிதைவிற்றுச் செலவுசெய்து - துடியாக முன்னுப்பை யுருக்கிப்பாரு, தாயுமே உருகியது பொன்னாம்பாரு-தாட்டிகமாய் மணிபண்ணி யைந்துதன்னில், காயுமே கயிறுகட்டிச் செபமேபண்ணு - க்ணக்காக உருச்செபிக்கக் கர்த்தர்வந்து ஞாயமாய் வருவார்கள் வாதங்கேளு -காட்டிலே சொல்லாதே நயந்துகேளே. (64)

நயமான உப்புமணி நாலுக்குத்தான் - நலமாக ஒன்றுகொடு தங்கந்தானே, பயந்துமே போகாதே தங்கம்நேரே - பாய்ச்சி விடு நாகத்தைப் பரியுமாகும், துயந்துபா ரிரவியது நூற்றுக்கொன்று - தூக்கிவிடு மாத்துமது பத்துமாகும், வயந்துமே விற்று யிதைச் செலவுசெய்து-வழியோடே யிருவென்று யாகோப் சொன்னாரே. (65)

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச் - சொற்பெரிய களங்கமது பலமும்பத்து, நன்னயமாய்க் கெந்தியது பலமும் ஒன்று-நாடறிய களங்கதுவும் பலமும்ஒன்று - கன்னயமாய் வெற்றிலையின் சாறினாலே, வன்னயமா யரைத்திடவே சாமம்ஒன்று - வகையாகக் குப்பிதனி லடைத்திடாயே. (66)

அடைத்துமே மேருதனி லேற்றிக்கேளு - அடவாக எரிப்பதுபன் னிரண்டுசாமம், நடைத்துமே எடுத்துப்பார் செந்தூரந்தான் - நலமான நவலோகந் தனில்செந்தூரம், கடைத்துமே அணைத்திட்டுப் பார்க்கும்போது - கனகமது பத்தாகுங் கண்டுகொள்ளு, தடைத்துமே செந்தூரம் உள்ளேகொள்ள - தடையறவே யாகோபு சொன்னவாரே. (67)

சொன்னதொரு செந்தூரந் தேனிலுண்ண - சீர்பெற்ற ஞானியாஞ் சாவோயில்லை, நன்னயமாய் மாந்தளிர்போல் மேனியாகும்-நலமாகத் தேகமது கல்த்தூணாகும், இன்னிலத்தில் நோயெல்லாம் தவிடுபொடியாகும்-இருந்துரைக்க யாகோபு சொன்னதாலே, கன்னல்போல் காரியத்தைச் சொல்லிவிட்டேன் - கர்த்தாவி னருளினாற் கண்டுகொள்ளே. (68)

கண்டுகொள்ளு உப்பைமுந்திக் கட்டியாடும்-கனகமது இருந்துவிடும் கணக்குமாகும், வண்டுமே உப்பில்லாக் கட்டதெல்லாம்-வாருபோல் கட்டாமோ வடிவுமில்லை, துண்டுமே மூலிகையா லுப்பைக்கட்டில் - தொல்லுலகில் ரசவாத மெல்லாங்கட்டும், பண்டுமே பழங்கதைபோற் பேசினக்கால் - பதிவில்லை தோய்ந்துவிடும் யாகோப் சொன்னாரே. (69)

பலவாகும் உப்பைமுந்தித் தெரிப்படக்கு - பதிவாகக் கட்டிநின்றால் பலனுமாகும், பிலமாகுஞ் சூடமது சொக்கியாடும் - பின்புதான் வேதையது பிரட்டுமில்லை, கலனை யிப்படியே கட்டாப் போனால் - கரியான செயமில்லை கண்டுபாரு, தலமாக ஒருருவாய் நின்றுகொண்டு - தாஷ்டிகமாய் யாகோபு தான்சொன்னாரே. (70)

### தாளகச் சேந்தூரம்.

சொன்னதொரு தாளகச்செந் தூரங்கேளு - சொற்பெரிய கைட்டாக வரிசையாக, நன்னயமாய் அப்பிரகம் பலந்தான்பத்து-நாட்டியதை நவநீதம் பண்ணிநீயும், இன்னிலத்திற் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே - இருசாம மரைத்துவில்லை காயவைத்து, கன்னிகராய் புடம்போட்டு எடுத்துக்கல்வம் - கணக்காகப் பழச்சாற்றால் சாமமாட்டே. (71)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து - அடவாகப் பெரிய புடம் போட்டுநீயும், தாட்டிகமா யிப்படிக்குப் பத்துப்போட்டுத்-தானெடுக்கச் செந்தூர மாகும்பாரு, காட்டியே கல்வமிட்டுப் பின்புகேளு - காரணமாய்த் தாளகமும் பலமும்ஒன்று, வாட்டுமே ரசபதங்கம் பலமும் ஒன்று - வகையாக ரண்டுமே கல்வத்திட்டு, ஈட்டுமே ரசபதங்கந் தாளகத்தை - இதமாகக் கல்வமிட்டு வெண் கருவாலாட்டே. (72)

ஆட்டியே உண்டைபண்ணிக் கதிரில்வைத்து - அன்பாக முன்போட்ட அப்பிரகத்தை, நாட்டியே எருக்கம்பால் தன்னு லாட்டி - நலமாக முன்னுண்டை மேலேதானும், வாட்டுமே கவசமிட்டு வனுவாகத்தான்- வடிவாகக் கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு, வீட்டிமையாய்த் தன்பின்பு செய்யுமார்க்கம்-வீரியமா யாகோபு விளம்பினரே. (73)

வகையென்ன கல்லுப்புப் பட்டியும்ஒன்று - வன்மையாய் மேனிச்சாறு தன்னுலாட்டி, துகையாகப் புடம்போட்டு எடுத்துநீயும்-துப்பரவா யிருசட்டி உரசிச்சேர்த்து, தகையாகச் சட்டிநடு உண்டைவைத்து - தடையறவே சுத்திலுமே மேனியுப்பை, பகையாக யிட்டுமே அமுழ்த்திப்பின்பு - பதிவாக மேற்சட்டி மூடிப்போடே.

மூடியே சீலைமண் வனுவாய்ச்செய்து - முக்கியமா யடுப்பேற்றித் தீயைமூட்டி, வாடியே பன்னிரண்டு சாமத்தீயை - வகையாக எடுத்துப்பார் உயரயேரும், காடியே வழித்துயெடு கல்வத்திட்டுக்-கருணைபெற வெண்கருவா லரைத்துஉண்டை, பாடியே கதிரில் வைத்துப் பின்புகேளு - பரிவாக அடியில்நின்ற கவசந்தானே. ()

கவசமதை நீக்கியே பொற்றலையின் - கரிப்பான்றன் சாற்றிலரைத்தெடுத்து, பவசமுடன் கவசமது செய்துபின்பு - பக்குவமாய்ப் பனிரெண்டு சாமத்தானும், அவசியமாய்ப் போட்டெரித்துக் கவசம்நீக்கி - அன்புடனே பழச்சாற்று லரைத்துநீயும், எவருக்குந் தெரியாமற் கவசஞ்செய்து - இனிமையுட னெரிக்கச்செந் தூரமாமே. (76)

பார்க்கவே செந்தூரம் பவளம்போலாம் - பரிவான செந்தூரந் தணேயெடுத்து, ஏர்க்கவே ரவிநூற்றி லொன்றுதாக்க - இயலான செந்தூர மகிமையாலே, தார்க்கவே தங்கமது பார்க்கொண்ணுது-தடையில்லா ஏமத்தை வித்துநீயும், கார்க்கவே உண்டுடுத்தியிருநீயென்று - கருணைபெற யாகோபு கருத்தாய்த்தானே. (77)

கருத்தாகப் பணவிடைதான் தேனிலுண்ணக்-கனகநிறம் போலவே மேனியாகும், உருத்தாகுந் தேகமது அலரிபோலாம் - உற்றதொரு நோயெல்லா மோடிப்போகும்; உறுதியாய்ச் செந்தூரம் உண்ணமெத்த - உறுதியாய் வலுவாகுந் தேகந்தானே, வறுதியா யிருந்துவிடும் நாதந்தானும் - வரிசைபெற யாகோபு வலுத்திஞரே. (78)

வரிசையாய்ப் பெண்தள்ளி மண்டலமேயுண்ண-வளமாக யிருநீயும் பரிதிமதியளவும், கரிசையாய் வேதையது அதிகமாகும் - கருத்தாகக் கைபாக மறிந்துசெய்து, பரிசையா யாகோபு நபியுஞ் சொன்ஞர் - பாரிலுள்ளோ ரிதையறிந்து செய்துகொண்டு, உருசையுண்டுடுத்தியே யிருநீயென்று-உத்தமர்தான் சொன்னதிது உறுதிதானே. (79)

உறுதியாய் வாதத்தை உற்றுப்பாரு - உண்மையாய்க் கைபாக வரிசைகண்டு, குருதியாய் மார்க்கமதாய்ப் பலனுமாகும் - கணக்காக நம்பிஞற் பலனுமுண்டு, வருதியாய்ப் பாகத்தைக் கண்டுதேறி-வகையாகச் சரக்குமுதல் வரிசைகண்டு, பருதிமதி யுள்ளளவும் வாழலாகும் - பண்பரிந்து செய்துவிடச் சொன்னேன்பாரே. (80)

சொன்னதொரு எழுநூற்றில் வாதந்தானும்-சிறப்பாக நூற்றியைம்பத் தைந்திற்சொன்னேன், நன்னயமாய் முன்ஞலே எல்லாம்பார்த்து - நாடியே செய்திட்டா லெல்லாமாகும், கன்னல்போ லிருக்கின்ற நூலைப்பார்த்து - கருத்துவைத்தாற் பலஞகுங் கண்டுதேரு, பின்னமில் லாமலுமே பொய்யாகாது - பிரட்டாகச் சொல்லவில்லை பிலனுமாமே. (81)

பிலஞக யிந்நூலைப்பார்த்துத்தேறிப் - பிரட்டாகச் சொல்லாமற் பிடிவாதத்தை, அலஞகத் திரியாமற் பாகமாக - அலுத்துமே செய்துநீ யலையவேண்டாம், கலஞக நூல்பார்த்து வாதம் பார்த்துக் - காட்டுவழி பாராதே நூலைப்பாரு, சலஞக மனதுதான் கெட்டுக்கெட்டு - சாஸ்திரங்கள் பொய்யென்ருல் சவுங்கலாமே. ()

சவுங்கலாய்த் திரியாதே நூலைப்பாரு-தர்க்கமிட்டுத் திரியாதே நிதானமாக, நவுங்கலாய் வாதம்வந்தால் நிதமாய்ப்பேசி - நாடினு லுலகத்தோர் நம்புவார்கள், கவுங்கலாய் முரடனுய்ச் சொன்னு யாகில் - கடிந்துமே உயிரைத்தான் போக்குவார்கள், தவுங்கலா யிருந்துமே செய்துதேரு - தாஷ்டிகமா யுலகோர்க்குச் சொன்ன வாரே. (83)

சொன்னதொரு நூல்களிலே வாதம்பொய்யோ - சுருதிமுடி வசனங்கள் மிகவும்பொய்யோ, நன்னயமா யெழுநூற்றில் வாதம் பொய்யோ - நலமான களங்குபொய்யோ நாடிப்பாரு, தன்னகமா ய்ச் செந்தூரம் பொய்யோவென்ருல் - சவங்களே யிந்நூலே நாடிப்பாரு, கன்னல்போல் யாகோபு சொன்னநீதி - கணக்காகக் கைபாக வரிசைபாரே. (84)

வரிசையாய்ச் செந்தூரந் தன்னைப்பார்த்து - வகையாகக் கை பாக வரிசையாக, நரிசையாய்ச் செய்துமே தேரிப்பாரு-நலமான நபிமார்கள் பாதம்போற்றி, உரிசையாய் நூல்வர்மங் கண்டுதேரி - ஒழுங்காகப் பாகமதைத் தெரிந்துகொண்டால், தரிசையாய் நீடூழி காலம்வாழ்வாய் - தாஷ்டிகமாய் யாகோபு தன்மைதானே. (85)

### களங்குவகை.

தன்மையா யொருகளங்கு சொல்லுவேன்கேள் - தக்கதொரு நபிமார்க ளாடும்ஆட்டு, உண்மையாய் சருகைபித்தளை பலமும் பத்து - உறுதிபெறப் பந்துபோ லுருட்டிச்சுத்தி, வண்மையாய்ப் பெரியபுடம் போட்டெடுக்க - வளமான கரிபோலே தூளுமாகும், புண்ணியமாய்க் கல்வத்தி லிட்டுநீயும் - பூரணமாய்க் கள்ளிப்பால் தன்னுலாட்டே. (86)

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து - அடவாக அஞ்சுபு டம் போட்டெடுக்க, நீட்டியே நரகத்தின் வாடைநீங்கி - நிலவர மா யிருக்குமது யெடுத்துப்பாரு, வாட்டியே வண்டிலது கொஞ் சமிட்டு-வகையாகக் குகையிலிட்டு!உரக்கஊது, நாட்டியே செவ் வலரிபோலேசெம்பு – நலமாக உருகுமது நாட்டங்கேளே. (87)

நாட்டமென்ன சொல்லுகிறேன் தகடுதட்டி - நலமான கெந் தியைத்தான் அன்னத்தாலே, மூட்டவே அரைத்துயிடை செம் பிற்கட்டி - மூவுலக மெய்க்கவே நொருங்கமட்டும், காட்டியே புட மிட்டு எடுத்துப்பாரு - கரிபோலே தூளாகுங் கல்வமிட்டு, மாட் டவே பாதியிடு மிருதார்சிங்கி - மதிபெருக்கக் கல்வமிட்டு சாமம் நாலே. (88)

சாமந்தான் நாலாக அன்னத்தாலே-சரியாக அரைத்துவில்லை கதிரில்வைத்து, நாமந்தான் புடமிட்டு எடுத்துப்பாரு - நலமான நிறமதுவு முருக்கம்பூப்போல், வாமந்தா னிப்படிக்கு அஞ்சயிட்டால் - வகையான செம்பதுதா னிறந்துபோகும், தாமந்தா னுருக்குவெள்ளி தானுருக்கித் - தடையறவே செந்தூரம் ரெண்டு தாக்கே. (89)

சொன்னதொரு நாகத்தின் செந்தூரத்தைச் - சொற்பெரிய தங்கத்தைக் குகையிலிட்டு, தன்மையா யுருக்கிமுன்னஞ் செந்தூரத்தைத் - தாட்டியா யிடைக்கிடையாய்ச் சேர்த்துப்பாரு, பின்னமது வில்லாமல் வாங்கிக்கொள்ளும் - பொருந்தவே தகடடித்துப் பின்புகேளு, கன்னல்போல் தகட்டுக்கு முக்கால்கெந்தி - காரணமாய் வீரங்கால் கனிவாய்வாங்கே. (90)

வாங்கியே கல்வமிட்டு அன்னத்தாலே - வகையாக அரைத்து நீ வழித்துநீயும், பாங்கியே தகட்டின்மேற் கவசங்கட்டிப்-பத்தியாய் நொருங்குமட்டும் புடத்தைப்போடு, தாங்கியே பார்த்தாக்கால் கரித்தூளாகும் - தடையறவே யெடுத்துருக்க நாலிலொன்று, ஏங்கியே போகாதே தாரந்தன்னை - இதமாக ஆட்டுநீ அன்னத்தாலே. (91)

ஆட்டியே புடம்போடு சிவந்துபோகும் - அருணநிறஞ் செவ்வரளிப் பூப்போற்றானும், நாட்டிலே சொல்லாதே யிந்தப்போக்கை - நபிமார்கள் செய்ததிந்த வேதைமார்க்கம், காட்டியே வெள்ளியெட்டில் ரெண்டுதாக்கு-கனமான தங்கமாங் கருதிப்பாரு, தேட்டிலே வாதமெலாம் நொடிக்குளாகும் - திடமான யாகோபு சொன்னவாரே. (92)

சொன்னதொரு பணவிடைதான் தேனிலுண்ண - சொற்கதிர்போல் மேனியுமாஞ் சாவோயில்லை, நன்னயமாய் நோயெல்லாந் தவிடுபொடியாகும் - நாதாந்த நபிமார்க ளாடும்ஆட்டு, பின்னமில்லா விந்ததுவும் நன்றாகத்தான் - பெலமாக யிருக்குமது பலனைகத்தான், கன்னல்போல் மேனியுமாங் காயசித்தி-கனிவாக யாகோபு கருதினரே. (93)

கருதினர் எழுநூற்றில் பாகமெல்லாம் - காட்டவில்லை காட்டவில்லை யென்றுசொல்லி, வருதியாய்ச் சொல்லவில்லை முந்நூறுந்தான்-வழிகாட்டிச் சொல்லிவிட்டே னிந்தநூலை, பருதியாய் நூற்றியைம் பதிலே சொன்னேன் - பதிவாக என்னூலை முற்றும் பார்த்தால், குருதிபோற் தோணுமது குருகும்பாதை - கொட்டினேன் யாகோபு குணமாய்த்தானே. (94)

குணமான நொருக்குவெள்ளி முன்னேசொன்னேன் - குற்ற மறக் கெந்திவழி சேர்ந்தபோது, வனமாகச் சிதறுமது சுடரைச் சேர்த்து - வகையாக அரைத்துப்புடம் போட்டெடுத்து; தன மான தாளகத்தை நாலிலொன்று - தாட்டிகமாய்ச் சேர்த்தரைத் துப் புடமுமிட்டால், கனமான வெள்ளிசெந் தூரமார்க்கம் - கார ணமாய்க் கரியில்வைத்து வுருக்கிடாயே. (95)

உருக்கியே சாய்த்துப்பார் வெள்ளிதானும் - உறுதியா யெடு த்தபின்பு சொல்லக்கேளு, பருகிடவே எழுநூற்றில் சொன்னேன் செம்பு-பதிவாக எட்டுரெண்டு சேர்த்துக்கொள்ளு, உருக்கிடவே ஏமம்ரெண்டு சேர்த்துக்கொள்ளு - உறுதியாய் உருக்கிப்பார் மாத் துஎட்டு, முருக்கிடவே விற்றுநீ செலவுபண்ணி - மூவுலகு செந் தூரம் பண்ணித்திரே. (96)

பண்ணியே செந்தூரஞ் செய்துநீயும் - பதிவாக நவலோகம் பழுக்கப்பண்ணி, நண்ணவே காயசித்தி பண்ணிப்பின்பு - நலமா கப் பின்புநீ நாட்டம்பாரு, உண்ணியே ஒருவருடன் பேசாமற் றுன்-ஒழுங்காக நபிமாரைத் தொழுதுபோற்றி, துண்ணியே அல் லாவைத் துதித்துநீயும் - துணையாகப் பக்தியால் தோய்ந்துநில்லே.

தோய்ந்துநீ யுலகத்தில் வேதைமார்க்கம் - சொல்லாதே நிழ லைப்போல் காத்திருந்த, வாய்ந்திசைந்த வாதிக்கு உபதேசித்து - வகையாகக் காத்துமே யிருந்துநீயும், காய்ந்துமே காயசித்தி மிகு ந்துபண்ணிக்-காத்தோடே இராஜாவின் ஆக்கினைக்கு, பயந்துமே அடங்கிநீ யிருந்துகொண்டு-பதிவாக யிருவென்று யாகோப்சொன் னுரே. (98)

சொன்னதொரு நூலினுட வர்மங்கண்டு - சொற்பெரிய கை பாக வரிசைபாரு, நன்னயமாய் நீகண்டு எடுத்துக்கொண்டால் - நலமான ராசயோகத்தின்வாழ்வு, இன்னிலத்தி லிருக்கமட்டும் உண் டாம்பாரு-இதமாக நூலில்லா வாதம்பார்த்தால், சொன்னமய மாகாது தோய்ந்துபாரு-தொல்லுலகில் யாகோபு சொன்னதாமே.

தானென்ற இந்நூலில் வாதம்பார்த்தால் - தாஷ்டிகமாய் யா கோபு சொன்னநீதி, வானென்ற வையகத்து வாதிமார்கள்-வகை யாகக் கண்டுதான் பிடிப்பாரப்பா, கானென்ற கர்த்தாவைத் துதி த்துநீயும் - கைமுறையை யறிந்துநீ கண்டுகொள்ளு, நானென்ற கைபாக வரிசைதப்பில் - நலமில்லை யென்றுசொன்னுர் யாகோபு தானே. (100)

சொன்னதொரு எழுநூற்றில் சத்துமார்க்கம் - சூட்சமாய்ச் செம்பெடுக்கச் சொன்னேனென்பாரு, நன்னயம தாகவேயிந் நூலிற் றானே - நலமாகப் பாகமெல்லாஞ் சொல்லிவிட்டேன், கன்னல் போற் துருசுடனே கெந்திசேர்த்துக்-கரும்பாக உருக்கிடவே செம்புமாகும், இன்னிலத்திற் கொடியோனைச் சேருபின்பு - இதமாகத் தாளகத்தைச் சேருபின்பே. (101)

சேர்க்கவே கெந்தியம் தாரசயம் - கெட்டியாய்ச் சிவந்துமே யிருக்கும்பாரு, பார்க்கவே செம்புதான் சிவந்துநிற்கும் - பதிவான யெட்டுரெண்டு அயத்தைச்சேர்த்து, நார்க்கவே அதையரைத்துப் புடமுமிட்டால் - நலமாக உருக்கிடவே செம்புமாகும், கார்க்கவே கல்மசங்க ளகன்றுநிற்கும் - கனகமய மாகுமென்று கண்டுகொள்ளே. (102)

கண்டுநீ பாகத்தைக் கண்டுஉண்ணி - காரணமாய் ரசவாதங் கண்டுகொள்ளு, தொண்டுபெறும் தொல்லுலகிற் சொல்லிடாதே- துடியாகச் சொன்னக்கால் தலையும்போகும், பண்டுபடும் எளியவர்போல் பதமாய்நில்லு - பாரித்தா லுனதுவுயிர் நிலையாதப்பா, வண்டுபோல் பகர்ந்திடுவீ ரொன்றுதானும் - வண்மையா யாகோபு வசனித்தாரே. (103)

**களங்கு.**

வசனித்த எழுநூற்றில் சொன்னவாதம் - வகையாகச் சுருக்கத்தில் சொன்னேனப்பா, தசனித்துப் போகாமல் துருசுதன்னைச்- சாங்கமாய்ப் பலம்பத்து நிருத்துக்கொண்டு, உசனித்த நாற்றமது துருசுரெட்டி - உத்தமமாம் வீரமது காலும்போட்டு, நசனித்த பழச்சாற்றில் நாலுசாமம் - நலமாக அரைத்துமெள்ள வில்லைகட்டே. (104)

கட்டியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு - கனிவாக அதன் பேரிற் கவசங்கேளு, தாட்டியே கல்லுப்புச் சுண்ணம்நேராய்-தனையரைத்து வில்லைக்குக் கவசங்கட்டி, தாட்டிகமாய்ப் புடமிட்டு எடுத்துப்பார்க்க - தன்மையாய் யாகோபு சொன்னநீதி, மூட்டியே கரிபோலத் தூளுமாகும் - முடியநீ யரைத்திடவே முறையைக் கேளே. (105)

முறையாகச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு - முதலான கெந்தியது செம்பினோடே, வறையாக சேர்ந்துதென்றால் கறுத்துப் போகும் - வண்மையாய் சிவக்கநீ விபரங்கேளு, நறையாத தாரமது பாதிசேர்த்து - நலமான அன்னத்தி னீராலாட்டு, கரையாக அரைத்துவில்லை கதிரில்வைத்துக் - கடிதாகப் புடம்போடச் செந்தூரமாமே. (106)

செந்தூர மாச்சுதென்று மயங்கவேண்டாம் - செப்பமாய்ச் சுடர்க்கொடியோன் தன்னைச்சேர்த்து, பந்தூர அரைத்துவில்லை காயவைத்துப் - பதிவாகப் புடம்போடக் கசடுநீங்கும், கந்தூரம் எலுமிச்சம் பழத்தின்சாற்றில் - கதியாக வூரவைத்துப் பொடியைத்தானும், கந்தூரச் சிந்தூரம் எட்டிலொன்று - கனிவாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. (107)

அரைத்துநீ பழச்சாற்றில் மைபோற்றானே - அடைவாக வில்லைதட்டி ரவியில்வைத்து, திரைத்துமே புடம்போட்ட வில்லை தன்னைத் -திண்ணமாய்க் கொட்டைப்பாக் களவுதானும், துரைத்துமே கரியில்வைத்து உருக்கிப்பாரு - துரிதமாய்ச் சூரியன்போ லுதயமானால், பரந்துமே உருக்கியதை வெள்ளிதன்னில் - பதிவாகக் கொடுத்திடவே பழுக்கும்பாரே. (108)

பழுக்கவே உருக்குமுகம் பாய்ச்சினுக்கால் - பதிவான வெங்காரஞ் சமனைச்சேர்த்து, உழுக்குமே முன்சாற்றி லரைத்துநீயும்- உற்றுமே போட்டிடவே கருத்துப்போகும், வழுக்குமே உருக்கியதை ஊதிப்போடு - வகையாகப் பொன்போலே கண்விட்டாடும், இழுக்குமே வாராது வெள்ளிதன்னில் - இதமாக யெடுத்திடவே யாகோப்சொன்னாரே. (109)

சொன்னதொரு செம்பதனை யெடுத்துக்கொண்டு - துடியான வெள்ளியது எட்டில்நின்று, நன்னயமாய்க் கொடுத்தூதித் தங்கம்ரெண்டு - நலமாகச் சேர்த்திடவே மாத்துஏழு, கன்னல்போலாகுமடா நபிமார்சொன்னார் - கருணைவைத்து உலகத்தில் வாதிக்காக, இன்னிலத்திற் சொல்லிவிட்டேன் புத்திவாதம்-இசைந்தவர்க்கு ஆகுமட்டா உறுதிதானே. (110)

உறுதிதான் யேதென்றால் சொல்லக்கேளு - உற்றுநின்ற எழுநூற்றிற் சொன்னசெம்பு, அறுதியாய்ச் சொல்லிவிட்டே னம்பவேண்டாம்-அடவாக யிந்தநூற் றைம்பதுக்குள், மருதியாய்ச் சோதித்தா லெல்லாமாகும் - மனமறிந்து சுட்டாக்கா லெல்லாமாகும், கருதியாய்ச் சுடாவிட்டால் தெரியாதப்பா - காரணமா யாகோபு நலஞ்சொன்னாரே. (111)

சொன்னதொரு துருசுடனே கெந்திசேர்த்துத் - துணையில்லை சக்தியில்லை துரிதமில்லை, உன்னிலத்திற் சிவந்தாலே சூடம்நேராம் - உரவான செம்புவந்து திறக்கமேலாம், இன்னிலத்தி லிந்நூல்போ லெந்நூலுமில்லை - இதமாகத் தோன்றுமிதில் சாரமெல்லாம், கன்னல்போ லேயெல்லாம் சேர்ந்தாலன்றோ-கனிவாக வெள்ளியெல்லாம் பழுக்கும்பாரு. (112)

பழுத்துமே வெள்ளியது நின்றுலென்ன - பதிவான தங்கமது சேராதாலே, முழுத்துமே பழுக்காது சேர்த்துத்தங்கம்- முனையாகும் வித்துமே செலவுசெய்வார், இழுத்துமே இப்படிக்கு மட்டம்ஆகில் - இசைவாகத் தப்பினுல் பழுக்காதப்பா, முழுத்தேங்காய் நாயுருட்டும் வாறுபோல - மூலத்தைக் கண்டாக்காால் எல்லாமாமே. (113)

மூலத்தைக் கண்டுமே மக்காதேசம் - முனிவாக நபிமார்கள் மெத்தவுண்டு, சீலத்தைக் கண்டுமே வாதஞ்செய்து - சிறியோனுயிருந்துமே பெரியோர்வேடம், காலத்தைப் போக்கியே லிங்கங்கொள்வார் - கருத்தாக யிருந்துமே கண்டுதேறி, காலத்தைக் கழியாதே யென்றுசொன்னூர் - கருத்துடனே தாட்டிகவான் யாகோபு தானே. (114)

சொன்னதொரு நூல்தனிலே மர்மங்கண்டு - சொற்பெரிய பெரியோர்கள் நுனுக்கம்கண்டு, நன்னயமாய்க் களங்குபத்தி வரிசைகண்டு-நாடியதோர் செம்பெடுக்கும் வரிசைகண்டு, இங்கிலத்தில் மதிதனிலே கொடுக்குநேர்மை - இதமான தங்கத்தைச் சேர்க்குநேர்மை, கன்னல்போ லூதியே யெடுக்கும்நேர்மை -கண்டாக்கால் வாதியென்று கருதலாமே. (115)

கருதியே சத்துடைய மர்மங்கண்டு - கனமாகச் சுடர்க்கொடியோன் தன்னைப்பார்த்து, வருதியே தாளகத்தின் நேர்மைகண்டு- வளமான துகையறிந்து அயத்தகட்டை, உருக்கவே புடத்தினுடமார்க்கங்கண்டு - உளவாகச் சேர்த்திட்டு ஊதிப்பார்த்தால், கருதியே யிப்படியே யெல்லாமாகும் - கர்த்தகமா யாகோபு காணென்றுரே. (116)

நலமான களங்குசத் துருவுங்கண்டு - நாடியே பூத்துவரும் நேர்மைபார்த்து, பலமாகச் சேர்த்தரைத்துப் புடத்தைப்போட்டு - பதியறவே உருக்கியெடு செம்பேயாகும், வளமான செம்பதுவை மதியதெட்டில் - வடிவாக யிரண்டுசேர் தங்கம்ரெண்டு, பிலமாகச் சேர்த்துருக்கப் பொன்னுமாகும் - பிசகாது புடத்துக்கு யிரங்கும்பாரே. (117)

இரங்கவே செம்பதுவுங் கருத்துப்போனுல்- இசைவாக வெங்காரம் பாதிசேர்த்து, வரங்கவே சேர்த்தரைத்துப் புடமொன்றிட்டால் - வகையாக அயக்கசடு மாறிப்போகும், குரங்குபோ லலையாமல் மாறிப்பாரு - குறிப்புவைத்துச் சோதித்தாற் பலனுமாகும், கரங்கென்ன சாதிக்க வகையில்லாட்டால் - கடிதான பலனில்லை கண்டுபாரே. (118)

## சத்து வகை

கண்டுபார் சத்துக்கள் சொல்லக்கேளு - கனிவான சுடர்க் கொடியோ னில்லாவிட்டால், தொண்டுபார் கெந்தியுட யீயந்தானும் - திறமாகப் பிரியாது பக்கமில்லே, பண்டுதான் தாளகஞ்சேராமற்போனல் - பதிவான கெந்தீயம் பிரிந்திடாது, உண்டுபார் உன்னுடலே மேலேயேத்தும் - உற்றுப்பார் யாகோபு உறுதியாமே.

உறுதியாய்க் களங்கோடு செந்தூரங்கள் - உண்மையாய் யிந்நூலிற் சொன்னற்போல, மறுதியாய்ப் பார்த்திட்டால் தங்கமாகும் - மகத்தான நபிமார்கள் ஆடுமாட்டு, சருதியாய்க் கைபாக வரிசைதப்பில் - சத்துமே பலனுமில்லே சித்தியில்லே, தருதியாய்த் திரியாதே யென்றுசொன்னர் - தாஷ்டிகவான் யாகோபு தன்மை தானே. (120)

தன்மையாய் மூன்றூறு எழூநூறிற்ருன் - தாட்டிகமாய்ச் சொன்னதென்ன தன்மையாக, உண்மையாய்ச் சுருக்கத்தை உற்றுப்பார்த்து - உண்மையா யிரண்டுமூந்நூற் தன்னேப்பார்த்து, முண்மையாய் வைத்தாலே தெரியுமப்பா - மூர்க்கமா யொருதரந் தப்பிற்றென்ருல், வண்மையாய் மூன்றுமுறை வைத்துப்பாரு - வடிவான குருவாகும் வளமைபாரே. (121)

பாரேநீ மக்காவின் தேசந்தன்னில் - பாங்கான மனிதர்சிலர் வாதஞ்செய்வார், காரேநீ நபிமாரைப் போலிருப்பார் - கடிதான வடக்கந்தத் தேசந்தன்னில், நாரேநீ கீழ்பக்கத் தேசந்தன்னில் - நலமாக நம்பியே செய்யமாட்டார், ஆரேநீ பொய்சொல்லித் திரிவாரப்பா - அளவறந்த தேசத்து வழக்கம்பாரே. (122)

வழக்கமாந் தேசத்தின் மார்க்கமப்பா - வளமாக மெத்தவுண்டு வர்க்கமப்பா, களமாக மக்காவின் தேசந்தன்னில் - நல்மான அன்பிலார் பிறந்தசீமை, களக்கமாய்க் கர்த்தாவைப் போலிருப்பார் - கண்டுகொள்வார் வாதமதின் நேர்மையெல்லாம், பழக்கமாயிருக்குமந்தத் தேசம்மெத்தப் - பதிவாக விருத்தியா மவர்கள் தானே. (123)

விருத்தியா மின்னமொரு களங்குகேளு - வேதாந்த நபிமார்களாடு மாட்டு, கருத்தியா மக்காவின் தேசந்தன்னில் - காரமா மெத்தவே உண்டுதானும், விருத்தியா யிருந்துமே சமயலோட்டை - விதமான ஓட்டைமிக உடைத்துவாங்கி, வருத்தியாய்ப் பூநீரு பிச்சுப்போட - வளமாகத் தெளியுமது நாட்டங்கேளே. (124)

நாட்டமாய்க் கெந்தியது பலமும்பத்து - நலமாகத் தெளிந் தநீர் தன்னில்விட்டு, வாட்டமாய்க் கருங்காலிக் கட்டையாலே - வசமாக அயக்கரண்டி தன்னிலிட்டு, காட்டமா யெரித்திடவே மெழுகுமாகும் - கனமான மெழுகுதனைப் பதனம்பண்ணி, நீட்ட மாய்ச் செம்பென்ற தகட்டிற்பூசி - நிலையாகப் புடம்போடத் தங்க மாகும். (125)

தங்கமாம் லோகமெல்லாந் தடவிப்போட - தன்மைபெறத் தங்கமாம் நல்லவித்தை, எங்கள்குல நபிமார்கள் செய்வார்பாரு - இதமாக நான்கண்டு உலகோருக்கு, உங்களுக்காய்ச் சொல்லிவைத் தே னிரக்கமாகி - உண்மையாய் மெழுகதனை ஒட்டகப்பாலில், சங்கமா யிருக்கவென்றால் மண்டலந்தான் - சாப்பிடவே காயசித்தி வலுக்கும்பாரே. (126)

வலுதியாய்த் தேகமது செவ்வலரிபோலாம் - வகையான உன் சடலங் கற்றூணாகும், சலுதியாய் மெழுகதனை உண்டுபாரு-சதியான நோயொன்று மில்லையில்லை, உறுதியா யுன்வயது நூற்றியெழு பத்து - உண்மையாய்த் தேகமது கஸ்தூரிவீசப், தறுதியாய் நர ம்பதுவு முருக்குமேறும் - தானறிந்து யாகோபு சொன்னதாமே.

கருவென்ன சொல்லுகிறேன் உனக்குமேகேள் - கவலையது கெந்தியில் துருசைக்கொல்ல, உருவென்ன சத்தாகும் உடைத்துப் பாரு-உணர்வாக வெங்கலம்போ லுறுதியாகும், செருவாகும் வெங் கலம்போல் சத்தாய்நின்ற - செம்பெடுக்க வகையொன்று சொல்லக் கேளு, தருவாக வாழ்மடந்தை சத்திற்பாதி - சரிசேரு அரைத் துக்கனல் மீதில்வாட்டே. (128)

வாட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து - அடவாகப் புடம் போடச் சிவக்கும்பாரு, கூட்டியே சிவந்தபின்பு மடையன்தன் னைக் - குணமாகப் பாதிதான் கூடச்சேர்த்து, வாட்டியே அரை த்துவில்லை முன்போல்வாட்டி - வடிவாக வில்லையைத்தான் கதிரில் வைத்து, காட்டியே புடம்போடக் கெந்தியீயம் - கலமான சத் துமே நல்லதாமே. (129)

நலமாகக் கொடியோனைச் சேர்த்துப்பின்பு - நாடியே அரை பொடியைப் பழச்சாற்றாலே, நலமாக மூன்றுநா ளூறவிட்டு - நல மாகப் புடம்போட்டுச் சத்திற்சேர்த்து, கலமாக அரைத்து ரவி காயவைத்து - கடிதாகப் புடம்போட்டு எடுத்தாயானால், தலமா கக் கறுப்பாகும் கறுப்பினோடே - தடையறவே வண்டிலது பாதி சேரே. (130)

பாதிநீ சேர்த்துமே முன்னீராலே - பதிவாக அரைத்துவில்லை காயவைத்து, நீதியாய்ப் புடம்போட்டுக் குகையிலிட்டு - நினைவாக உருக்கியே பார்க்கும்போது, வாதிகாள் சரியான செம்புமாகும் - வடிவான செம்புதனை மதியதெட்டில், சாதிப்பாய் ஒன்றுகொடு மென்றுசொன்னர் - கருணைபெற யாகோபுகருத்தாய்த்தானே. (131)

கருத்தாகத் தங்கம்ரெண்டு சேர்த்துப்பாரு-கருணைபெறமாத்தேழு காணுமப்பா, உருத்தாக யிதைவித்துச் செலவுசெய்து-உண்மையுள்ள நபிமார்கள் போலிருந்து, பொருத்தாகப் பூவுலகில் வெளியோர்போலப்-பேசாம லிருந்துமே செம்பைச்செய்து, வருத்தமில்லா வாழ்கயா கோபுசொன்னர் - வண்மையிந்தச் செம்புதனை நாடிப்பாரே. (132)

சிங்கிமுறை.

நாடிப்பார் மிருதாரி சிங்கிதன்னை - நபிமார்கள் ஒளித்திட்ட நட்பைக்கேளு, கூடிப்பார் சிங்கியது பலமும்பத்து - கூசாமல் வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல், வாடிப்பா யிரண்டிடைதான் கூட்டிநீயும் - வளமாக அன்னமென்ற பாலாலாட்டி, தாடிப்பாய் புடமைந்து போட்டுக்கொண்டு - தடையறவே கல்வமதிற் போட்டுக்கேளே. (133)

போட்டுமே தாளகமும் ரசமும்நேரே-போகமாய் நாலிலொன்று இட்டுநீயும், பட்டுமே அன்னமென்ற பாலாலாட்டிப்-பதிவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து, நாடுமே புடம்போடப் பவளமாகும்-நலமான செந்தூரம் ரவிநூற்றிற்ருக்க, பாடுமே கொடுத்திடவே மாத்துப்பத்தாம்-பதம்பலமாய் பணவிடைதா! னுண்ணக்கேளே. ()

உண்ணவே மண்டலத்திற் காயசித்தி - உறுதியாய்க் காயமது செவ்வலரிபோலாம், நண்ணவே காயமது உகாந்தகாலம் - நலமாகச் சாவில்லை நடையுமெத்த, துண்ணவே சந்திரன்போற் காந்தியாகும் - துடியாக நரம்புகளு முருக்குமேறும், கண்ணவே தேகமது பவளம்போலே - கருத்துணர்ந்து யாகோபு கருணைத்தானே. (135)

கருணையா யெழுநூற்றிற் சொன்னமார்க்கம் - கடைசிதனிலிந்நூலைக் கருதிச்சொன்னேன், வருணையா யெல்லோரு மெந்தன் நூலை - வகையாகப் பார்த்துமே கருத்துணர்ந்து, தருவான கருவையெல்லா மனதிலெண்ணித்-தாட்டிகமாய்ப் பாகமாய்ச் செய்துகொள்ளு, கருணையாய் நீடூழி காலம்வாழ்ந்து - சத்திசிவம் போலிருந்து வாழ்வர்தானே. (136)

இருந்துமே வெள்ளிவித்தை முன்னேசெய்து - இதமாகப் பின்புதான் சத்துமார்க்கம், வருந்தியே நீகண்டு உப்பைச்செய்து வடிவான கைபாக வரிசையாக, அறிந்துமே செய்துபின் செந்தூரத்தை - ஆட்டியே வைத்துமே நாடிக்கேளு, பறிந்துமே திரியாதே நாடிப்பாரு - பதிவான யாகோபு பலன்சொன்னாரே. (137)

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால் - சொற்பெரிய நரகத்தில் வீழ்ந்துமாள்வார், நன்னயமா யொருவருட பேச்சைக் கேட்டு - நலமாகச் சுட்டாக்கால் நரகமாகும், இன்னிலத்திற் சாஸ்திரங்கள் பொய்யதென்றால்-இனிதாக நரகமது எய்துமப்பா, கன்னல்போ லின் னூலை யெல்லாம்பார்த்துக்-கருத்தாகச் சுட்டாக்கால் யெல்லாமாமே. (138)

வாதமா மயச்சத்து முன்னேபார்த்து-வகையாகச் செம்பெடுத்து வெள்ளிதன்னில், தூதமாய்ச் சேர்த்தூதத் தங்கமாகும் - துணையாகச் செலவுக்கு வைத்துக்கொண்டு, உங்கள்குலந் தழைக்கவே சோறுபோடு - ஒருவருக்குஞ் சொல்லாதே உண்மைசொன்னேன், மங்களமா யிருவென்று யாகோபுசொன்னார் - மதியான புத்தியுள்ளோர் கண்டுதேறே. (139)

காணவே இன்னமொரு களங்குகேளு - கனிவான செம்பால் கீழ்மூடிபண்ணி, தோணவே அயத்தாலே மேல்மூடிபண்ணி- செயமான நாகமது பலமும்எட்டு, வாணவே உருக்குமுகந் தன்னிற்றானும் - வளமான சூதமஞ்சு தொந்திபின்பு, தாணவே கெந்தியது பலமுமஞ்சு-தடையறவே தாளகமும் பலமூன்றே. (140)

மூன்றாக வீரமது பலமும்ரெண்டு - முனிவாகக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, நன்றாக அயச்செம்புக் குள்ளேபோட்டு - நலமாக மூடியே சீலைசெய்து, வன்றாகப் புடம்போட்டு யெடுத்துப் பாரு - வண்மையுள்ள மேல்மூடி வெட்டையாகும், தோன்றாது கண்டதுபோல் குகையிலிட்டுத் - துணிவாக உருக்கையிலேசத்துமாமே. (141)

சத்தான சத்துக்குள் காரமிட்டுத்-தடையறவே யுருக்கியதைச்சாய்த்துப்பாரு, முத்துஉடைந் தாப்போலே சத்துமாகும்-முனிந்துமே சத்திடைக்குக் காரஞ்சேர்த்து, சித்தான கல்வமதி லிட்டரைத்து - திடமான அன்னத்தால் சாமம்நாலு, நத்தாக அரைத்துவில்லை காயவைத்து-நலமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு, பத்தாகச் சிவந்ததுவுஞ் சத்துமாகும்-பதமாக யெடுத்துமே பாகங்கேளே. (142)

பாகங்கேள் யெடுத்துமே கொடியோன் தன்னைப்-பதிவாகப் பார்த்துமே அன்னத்தாலாட்டி, போகாமல் வில்லைதட்டிக் கதிரில் வைத்து - புகழ்ந்துமே புடம்போடச் செந்தூரமாகும், நாகமாய்ச் செந்தூரந் தனையெடுத்து - நபிமார்கள் சொன்னபடி நாட்டம்பார்த்து, பூகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து-உறுதிபெறத் தங்கமது ரெண்டுசேரே. (143)

சேர்த்துமே ஊதிப்பார் செம்பொன்னாகும்-சிறப்பாகச் செம் பொன்னை வித்துநீயும்,கார்த்துமே உண்டுடுத்திக் கந்திரிகள்செய்து-கடிதான ஞானயோகத்தைப்பாரு,நார்த்துமே ஆண்டவனைத் தியானஞ்செய்து - நலமான நபிமார்கள் பாதம்போற்றி, பார்த்துமே யிருவென்று யாகோபுசொன்னார்-பதம்பெற்ற போதகரைப் பணிந்துபோற்றே. (144)

பணிந்துமே சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு - பரிபாஷை நாமமது வெளுத்துப்போகும், கனிந்துமே நூலினுட மர்மங்கண்டு-கருத்துவைத்து நூறதனைக் கண்டுபார்த்து, தனிந்துமே தம்பிரான் தன்னைத்தானும்-தாட்டிகமாய்த் துதிசெய்து கருத்தில்உண்ணி வனிந்துமே சரக்கெல்லாம் ஊணிப்பாரு - வகையாகக் குருவாகும் வணங்கிப்பாரே. (145)

வழங்கவே யென்பேரு ராமதேவன் - வகையாகப் பெருநூல்கள் பாடினேன்பார், தழங்கவே மறைவாக மறைத்துப்போட்டேன்-தாட்டிகமாய் மக்காவின் தேசமேக, துளங்கவே மகமதுவின் மார்க்கந்தன்னைத்-துடியாகத் தட்டியே சுருக்கமெல்லாம், விளங்கவே சொல்லிவிட்டேன் சத்துமார்க்கம் - விதமான செம்பெடுக்க வழிசொன்னேனே. (146)

சொன்னதொரு செந்தூரம் தைலமோடு - துடியான செம்பு வகைத் துடியாய்ப்பாடி, நன்னயமாய்க் கைபாக வரிசைபாடி - நலமாக நபிமார்கள் பிழைக்கவேண்டி, பின்னமது மில்லாமல் உலகத்தோர்க்கு - பிணக்கறவே ரசவாதம் பார்த்துத்தேறி, கன்னல் போற் சொல்லிவிட்டேன் நூலைப்பாரு-கன்னல்போ லுரைத்ததை நீ எல்லாம்பாரே. (147)

பிலனைக முன்னிருந்த நிலமைகண்டு - பெரிதான மக்காவின் தேசம்புக்கி, நலமாக நபிமாரை நாமுங்கண்டு - நன்மையா யென்னையவர் சேர்த்துக்கொண்டு, நலமாக நபிமார்கள் சொல்லச்சொன்னார் - நாட்டிலுள்ளோர் பிழைக்கவே நானுஞ்சொன்ன, தலமாகச் செந்தூரம் பாடச்சொன்னார் - தாட்டிகமா யந்தயிடம் விட்டேன்பாரே. (148)

பின்புதான் மலைதேசம் புக்கிப்பின்பு - பிரபலமாய் வகாரமது பின்புபாடி, அன்பாக எல்லோரு மெடுத்துக்கொண்டு - அடவாக யெடுத்துரைத்தார் கர்த்தரென்று, தென்புடனே சத்துடைய மார்க்கங்கண்டு - செல்வமாய்ச் சொல்லிவிட்டே னதிகநன் மை, சுன்னமாய் முன்னூறும் பின்னேபாடிச் - சூட்சமாய் யெல் லோருங் காணச்சொன்னேன். (149)

கண்டுபா ரின்னூலைப் பொருக்கியானும் - கனமாக நூற்றியம் பதுவும்பாடி, தொண்டுபட்டு முப்புமுதற் சொன்னேன்பாரு- தொல்லுலகில் ரசவாதிக் காகச்சொன்னேன், பண்டான சாஸ்தி ரமும் பார்த்துத்தேறி - பதிவாக உலகத்தோர் பிழைக்கவேண்டி, தொண்டுபட யிந்நூல் நூற்றைம்பதாகத் - துணையாக யெல் லாமுஞ் சித்தியாமே. (150)

யாகோபு வைத்திய சூஸ்திரம் 150.

முற்றிற்று.

உ

குருவே துணை.

யாகோபு அருளிச்செய்த

# சூஸ்திரச் சுருக்கம் ௫௱.

நாத னாகிய நல்லதோர் சித்தர்தம்
பாதந் தன்னைப் பணிந்திந்த மக்கத்தில்
வேதமாக விளங்குமெய்ஞ் ஞானியை
நீதமாக நிதந்தொழு தேத்துவாம்.

ஏரியதோர் வளர்ந்தபிண்டம் சுண்ணம்நாலு - இதமாகப் படியளந்து தோண்டியிட்டு, மீரியதோர் தோண்டிதனி விட்டமுக்கி மேதினியிற் நவச்சாரம் பலந்தான்பத்து , கூரியதோர் பொடியாக்கி நடுவில்வைத்துக்-குணமாக மேற்றோண்டி கவிழ்த்துமூடி, நாரியதோர் சீலைசெய்து அடுப்பிலேற்றி - நலமாக யெரித்திடுவாய் சாமம்பத்தே. (1)

பத்திட்டுக் கடுமையா யெரித்துஆத்திப் - பணியவெடு பிரித்திடவே மேலேயேறிச், சத்துநிற்கும் பார்குச்சி தன்னாற்றானே-தனைச்சுரண்டி பீங்கானிற் பனியில்வைக்க, நித்தியமாம் செயநீராம் வெள்ளம்போலாம் - நிலைக்கவெடு சிஷாவி லடைத்துநீயும், முத்திபெருந் துருசுதன்னைத் தோய்த்துப்போட்டு-முதன்மைபெற வெட்டுநாட் டோய்த்துப்போடே. (2)

போட்டுமே சுண்ணாம்பு வீரம்நேரே - பொருந்தமஞ்ச ளாந்துருசு மேலேகட்டு, நாட்டுமே கலசமிட்டு அங்கியிட்டு - நலமாகக் குக்குடத்தில் நீறிப்போகும், கூட்டுமே நீலனிடை சூதம்போட்டுக் - கூட்டியரை சாரநீ ரதனினாலே, வாட்டுரச கற்பூரம் நாலுக்கொன்று - வகையாக நிறுத்திட்டு அரைத்துக்கொள்ளே. (3)

கொள்ளப்பா மூன்னீரா லரைத்துசாமம் - குணமாகக் குக்குடமாய்ப் போட்டெடுக்கத், தெள்ளப்பா குருவாகுந் துருசுசெம்பில் - திறமாக உருக்கியிடை குருவைத்தாக்கு, மெள்ளப்பா அதை வாங்கித் தட்டத்தூளாம் - வெள்ளியது நால்சேர்த்து ஊதிப்போடு நல்லதங்க மூதினதோ ரிடைக்குச்சேரு - நலமாக உருக்கியே தகடுதட்டே. (4)

மெல்லவே கல்லுப்புப் பலமும்நாலு-மேன்மைபெற்றச் செங் கல்மா மூன்றுமாகும், கொல்லவே பொடித்துமிதற் குள்ளேவைத் துக் - கொடுமையாய் மூன்றுபுடம் போட்டுவாங்கு, மல்லாத்திப் புடமிறக்குந் தங்கந்தானும் - மயமாகுங் கொண்டிடவே வெண்மை யாக, எல்லார்க்கும் மேலான குருவைப்பேணி - இன்னமதின் பா கமதை யியம்பக்கேளே. (5)

கனகமது ரெண்டிடைதா னுருக்குமந்தக் - கனகத்தை யெடு த்துமெள்ள வித்துக்கொள்ளு, இனமத்த யிடந்தனிலே நின்று வாழும்-இனிதான ஞானத்தி னியல்புபாரு, உனவுடனே ஆறு தலமேறிப்பாரு-உத்தமித்தாய் வந்துநிற்பாள் உலகந்தன்னில், சன கனருள் பெறுவீரா மிந்தப்போக்குத் - தாஷ்டிகவான் யர்கோபுச் சொன்னவாறே. (6)

சட்டியிட்டு யிரும்புஅரப் பொடியும்பத்துத் - தாக்கிவிடு தாளகமவ் விடையே சேர்த்துக், கொட்டிவிடு கலயத்தி லிட்டுப் பாணி - குணமாக நாளொன்று அரைத்தெடுத்து, முட்டியிட்டு யிரும்புஅர பொடியும்பத்து - முடிவாகத் தாளகமவ் விடையே சேர்த்து, ஓட்டிவிடு குகையிலிட்டு உருக்கிப்பாரு - உறுதிபெறக் கால்நிற்கும் உற்றுப்பாரே. (7)

எடுத்துப்பா ரிருப்பதுவுங் கழிந்துநல்ல - இதமான தாளகத் தினீயமாகும், அடுத்துநிறு காலாகும் வீரம்போட்டு - அதைய ரைத்துப் பொற்றலையின் நீரினாலே, விடுத்துப்பார் வில்லைபண்ணிப் புடமூன்றிட்டால் - விதமாகச் செந்தூரம் பூப்போலாகும், கொ டுத்துப்பார் துருசுனுட செம்பில்நூறு - குணமாக வொன்றிடவே யேமமாமே. (8)

ஏமமாம் பணவிடைதான் தேனிலுண்ண - இருந்தவிடந் தெ ரியாது சிலேற்பனங்கள், காமமா மிகுதியுறும் வாயுவெல்லாங்- கடல்புக்கும் பித்தமுந்தான் காணுதோடும், வாமமாம் பெண்கள் தான் மயங்குவார்கள் - வடிவதுதான் செவ்வலரி போலாம்மேனி, சோமன்போ லாகுமிந்தச் செந்தூரந்தான் - சொல்லரிது யாகோபு சொன்னதாமே. (9)

கருநாகந் தணேக்கரண்டி தன்னிலிட்டுக் - கரிதனிலே உருக்கி அசம் நீரிற்சாய்த்து, வழிநாகஞ் சுத்தியதாம் குகையிலிட்டு - வகையாக உருக்கியிடை அரிதாரத்தைப், பரிவாகக் கிராசமிடு நொறுங்கும்நல்லாப் - பார்த்துயெடு கல்வமிட்டு அரையன்னத் தால், சிறுசாக வில்லைபண்ணி அங்கியிட்டுத் - திடமாக மாளமட் டும் புடத்தைப்போடே. (10)

போட்டுபுடஞ் சிவக்கமட்டும் போட்டெடுக்கப் - பொறுமை யுடன் செம்பருத்தம் பூப்போலாகும், தாட்டிகமா யெடுத்து வைத்துத் திருசுச்செம்பில்-தனையுருக்கி யிடைகொடுக்கத் தூளா ய்ப்போகும், காட்டாதே யித்தூளை மதியில்நாலில் - கணக்காக வொன்றிட்டு ஊதிப்போட்டு, வாட்டமுடன் யேமமிடை சேர்த்துருக்கு- வகையாகத் தகடுதட்டிப் புடத்தைப்போடே. (11)

இறங்குமது திரியிடையி லொன்றுதப்பும் - இதமாக யெடுத்துவித்துச் செலவுசெய்து, நிறங்களது குன்றுமற் செந்தூரத்தை நிர்ணயமா யுண்டிடவே காயந்தானும், உறங்குமது தாதுக்க ளிறுகிப்போகும் - உதிரத்தின் நோயெல்லா மொழிந்துபோகும், வரங்களது மூண்டாகு மயக்கந்தீரும் - வழுத்தினர் யாகோபு வசனித்தேனே. (12)

எப்படியும் பிழைப்புக்கு வாதஞ்சொன்னேன் - இறகுலின் கிருபையதா லின்னஞ்சொல்வேன் - செப்பமுள்ள மக்கமதீனத்துக்கேகி - திரும்புகையில் மெய்யென்ற தேகந்தன்னை, இப்புவியில் நெடுநாளா யிருப்பதற்கு - எத்தனையோ பாகமதுசொல்லி வைத்தேன், முப்பொருளை யறிந்துநீ சுண்ணமுப்பு - முடிப்பதற்கு வகையான கூத்துத்தானே. (13)

கூத்தனிடை வாழ்மடந்தை யிடையேசேர்த்துக் - குழிக்கல்வ மிட்டரைத்து யெருக்கம்பாலால், நேத்தியதா யரைத்துருட்டிக் கதிரில்வைத்து - நேருள்ள அப்பிரகம் வீரங்காலாம், பார்த்துமரை பாணியதால் வெண்ணெய்யாகும் - பதிவாகப் புடமிட்டு யெடுத்துக்கல்வம், சேர்த்துஅரை பாணியுமுண் ணுண்டைமேலே - செப்பியிடு உண்டையொன்று கவசம்நாலே. (14)

கவசமது கட்டிஅன்னந் தன்னிலிட்டுக் - கனியவதை மேல்மூடிச்சுண்ணத்தாலே, துவசமெரி அடுப்புதனிற் கடூரமாகத் - தூக்குயிரு சாமமெரித் தெடுத்துப்பாரு, நவசமது மேற்கவசம் பிரித்துத்தள்ளி - நாடியெடு குழிக்கல்வ மிட்டுநன்றாய், உவசமதா யுண்டையிடை யிரதஞ்சேர்த்து - உண்மையுள்ள வீரமது அரைக்கால்போடே. (15)

போட்டு பச்சைக் கற்பூர மரைக்காலிட்டுப் - புகலரிய அன்னமென்ற சோத்தாலாட்டி, நீட்டுவில்லை அங்கியிட்டு யெடுத்துமேலே - நிலவரமாய்த் துணிசுத்திச் சுண்ணமுப்பும், காட்டுமதை யரைக்கட்டு பெரியதாகக் - கருத்துறவே புடம்போடக் குருவுமாகும், தேட்டிவரும் சொன்னேன்யா கோபுயானும்-திறமாக களங்கமிது செய்துபாரே. (16)

களங்கத்தைத் துருசுடனே செம்பிரண்டிற் - கணக்காக வொன்றி டவே பொடியுமாகும், உளங்குளிர மதியதனை ஊதிப்போடு - உண்மையுள்ள பட்டமதிற் பாதியேயாம், தளம்பவதைத் தகட டித்துப் புடங்களிட்டால் - தப்பாமல் யேமமாம் தாக்கியாடும், பளம்பழுத்த வாருக்கும் வாதமாகும் - பதிவான யாகோபுப் பலன்சொன்னாரே. (17)

பொய்யாது வாதங்கள் களங்குமார்க்கம் - போக்கோடே செய்தாக்கால் யேமமாகும், வையகத்திற் காட்டாதே செயலைத் தானும் - வடிவான பொருளறியார் மாடுமொக்கும், மெய்யாகச் சொன்னாலும் விருத்தமாண்பார் - மேதினியிற் பொய்யென்பார் முழுமூடர்தான், கைதனிலே வெண்ணெய்தனை வைத்துக்கொ ண்டு - கனிவாக வுருக்கறியார் கருத்திலாரே. (18)

அரிதாரம் நாற்களஞ்சி அயமும்நேராய் - அதையரைத்து உருக்கிமெள்ளக் கல்வத்திட்டு, பெரிதான நாகமது களஞ்சிநா லாம் - பிசகற்றால் வீரமிட்டு நையத்தட்டி, விரிவாக அரைத்து நாக மல்லிச்சாற்றால் - விதமாக வில்லையங்கு புடமுமிட்டால், குறி போலா மஞ்சளது யெல்லாம்பற்பம் - கூட்டியெடு முன்அயத்தி லிடையேசேரே. (19)

இடைசேர்த்துப் பொற்றலையா லாட்டிவில்லை - எடுத்துக்கதிர் காயவைத்துப் புடமூன்றிட்டுத், தடையறவே சிகப்பாகு மெடுத் துநல்ல - தக்கமுள்ள துருசுரவி மட்டம்போலாம், விடையாகச் சேர்த்திடவே யேமமாகும் - வெற்றிபெறப் பணவிடைதான் தேனி லுண்ணத், தடைபடா நோயெல்லாந் தவறிப்போகும் - தாட்டிக மாய் யாகோபு சொன்னவாரே. (20)

குருட்டுநாய் ஈசலைத்தான் தாவித்தாவி-குணமற்று ஊளையிட்ட குணமதாகும், திருட்டுநாய் சிறுவீட்டி னுள்ளேசென்று - திட மாகக் கதவடைத்து அடிபட்டாப்போல், இருட்டறைக்குட் புகுந்தகள்ளன் யிடிபட்டாப்போல் - இனமாகக் கைபாகந் தெரி யாமாண்பர், உருட்டுகின்ற தேங்காயை நாய்போலொக்கும்-உண் மையாய்ச் சொன்னேன்யா கோபுதானே. (21)

சரக்கதனை யரைக்கவதன் காரந்தாக்கிச் - சரியாகக் கண்சிவ ந்து குதறிற்றானல், பரக்கவெடு வெண்கலத்தின் கிண்ணிதன்னைப்- பாங்காகக் கவிழ்த்துபழச் சாற்றையூத்தி, உரக்கவுரைத் துருப் பிடித்த வட்டிதன்னில் - உரைத்துமே களிம்பாக்கிக் கண்ணிலிட் டால், குரைகண்ணி விட்டிடக்கண் வலியும்நீங்கும் - குற்றமற யாகோபு குணஞ்சொன்னாரே. (22)

வாதவயித் தியந்தன்னை யொருவருக்கும் - வகைகாட்டில் நரகமது உனக்குமாகும், வேதமது நால்வேதத் தொகுப்பாய்நின்ற - வினையமுள்ள கைபாக மறியவேணும், யோகம்வந்து ஒருபொருளைக் கற்றுக்கொண்டால் - ஊமையதை ஒருவருக்கும் சொல்லப்போகா சூதமுனி யிம்மார்க்க மருளிச்சொன்னார் - சுயமாக யாகோபு சொன்னவாறே. (23)

வாருனக்கு உலகத்தில் வாதஞ்சொல்லி - வகையான பண்டிதமும் வகையுஞ்சொன்னேன், சாருவேன் கைபாகம் வரிசைபாரு - சரிவரவே களங்குமுதற் சாட்சிசொன்னேன், பேருலகு தனில் மாட்டு நடப்பும்பார்த்துப் - பேதாபே தங்களெல்லாம் பெருமை கண்டு, காருலவு பரிகாரம் முன்னேசெய்து - கர்த்தனுட வாதத்தைப் பின்புசெய்யே. (24)

வாசுகியி னிடைசமமாய்க் காரிசேர்த்து - வட்டமிட்டு உருக்கியிடு அன்னந்தன்னில், நீசமறச் சாய்த்துயெடு ரெண்டுபத்து - நிலவரமாய்க் களிம்புஅருங் குகையிலிட்டு, ஆசையுடன் அரிதாரமிடையேதாக்கு - அதுகருக்குங் கலவமிட்டு அன்னந்தன்னால், தாசமற அரைத்துவில்லை கரியில்வைத்துத் - தாட்டிகமாய்ப் புடம் போட்டு யெடுத்துப்பாரே. (25)

எடுத்தன்ன மிதிலிட்டுச் சாமமெட்டு - இழுத்தரைத்து இப்படியே சிவக்கமட்டும், அடுத்துவிடு செந்தூரம் முருக்கம்பூப்போல் - அதையெடுத்துத் துருசுரவி னூறென்றிட்டால், கொடுத்துவைத்த யேமமா மிந்தவித்தை - கொள்ளைகொள்ளையாயிருக்கும் வாதமாட்டு, தொடுத்தகை பாகத்தை மறக்கவேண்டாம் - தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே. (26)

கண்டுயெடு பணவிடைதான் தேனிலுண்ணக் - கதிர்மதியாந் தேகமது கற்றாணுகும், தொண்டுசெய்வா ருலகத்தோர் சொல்லவேண்டாம் - தோகையர்தான் வசமாவார் துலங்கத்தானும், பண்டுசெய்த பழவினைகள் தீர்ந்துநல்ல - பதிவான பிணியகலும் கடலேபுக்கும், வண்டுமயிர் போலாகும் பாகமாக - வழுத்தினர் யாகோபு வண்மையாமே. (27)

நாகமது பவளம்போற் களங்குதானும் - நற்சிகப்புச் செந்தூரம் அலரிப்பூப்போலாம், பாகமது சுண்ணமுமல் லிகைப்பூப்போலாம் - பதிவான மெழுகதுதா னிளக்கமாகும் - தங்கமது தயிலந்தான் நிறங்கறுப்பு - தாஷ்டிகமாய் நிறங்களறி மருந்துதன்னை, யோகமது வந்திடுங்காண் பாகமாகும் - யூகமாய் யாகோபு உரைத்தேன்பாரே. (28)

சத்தெடுத்தாற் கறுப்பாக விருக்கும்பாரு - சரியான வயஞ் சேர்த்தா லிப்படிக்கு, முத்தான வெண்காரஞ் சேர்த்துருக்க - முடிவான அயக்கசட்டை நீக்கும்நீக்கும், நத்தியே சத்திநிறஞ் சிவந்துகாணும் - நலமில்லை யென்றுமே பெரியவேண்டாம், சித்தான அயத்திலுள்ள செம்பெடுத்தாற்-சீமானுய்ப் போகலாந் தெளிந்து பாரே. (29)

நல்லாகச் சிவந்தசத்தைக் கல்வத்திட்டு - நலமான புகைநீரை விட்டுப்பார்க்க, எல்லாமுந் துருசதுபோல் நீலமாகும் - இதனை வைத்து உருக்கின லோடிப்போகும், வல்லமையாய்க் கேசரியைச் சட்டியிட்டு - வகையாக உருக்குமுகந் தன்னிலீயச், சல்லாபமாய்ச்சாமம் வைத்தெடுத்துத் - தாம்புரத்தில் மெய்க்களங்கு தாக்கிடாயே. (30)

இழுத்ததொரு செம்பைத்தான் காரஞ்சேர்த்து - இயல்பாக உருக்கிப்பார் செம்புமாகும், வழுத்தவே மதியேழு செம்புமூன்று வகையாகச் சேர்த்துருக்கித் தங்கஞ்சேர்த்து, அழுத்தமுள்ள தங்கமடா ஆணிக்கொக்கும் - அடவான செம்பிடைக்குத் தங்கங் கூட்டிப், பழுக்கஅடி தகடாக அடித்துநீயும் - பாங்காக் களங்கு பண்ணிற் சித்தியாமே. (31)

அடுத்துநின்ற அயச்செம்பிற் றங்கந்தானும் - அடவாகப் பிறந்ததினல் நிறத்தைக்கேளு, கொடுத்துவைத்தப் பசுமையாம் நிறங்குன்றுது - குணமான யீயத்திற் பிறந்ததங்கம், நடுத்தரமாம் நிறங்கேளு ஆணிக்கொப்பாம் - நலமான தாளகத்திற் பிறந்ததங்கம், பழுத்துமே பழுப்பான தங்கமாகும் - பகரரிய கெந்தகத்தின் பரிசுகேளே. (32)

நல்லாகச் சாரைக் காசுமாகும் - நல்லதங்க மாயிருக்கும் நாட்டம்பாரு, சொல்லான முன்னோர்கள் சொன்னசொல்லைத் - துப்பறவாய்ச் சோதித்துப் பார்த்துச்சொன்னேன், எல்லாமுஞ் சூதத்திற் பிறந்ததங்கம் - இயல்பான பீர்க்கம்பூ நிறமுமாகும், பல்லாமல் வீரத்திற் பிறந்ததங்கம் - பாலான வெள்ளைநிற மாகுந்தானே.

உண்டான தங்கத்திற் பிறந்ததங்கம் - உறுதிபெற நிறமதுவை சொல்லக்கேளு, கண்டான தங்கம்போல் நிறமுமாகும்-கருத்தான தாயைப்போற் பிள்ளையாகும், பண்டான நிறஞ்சொன்னேன் பதிவுகண்டு - பக்கமுள்ள வேதைமுகங் கண்டுயாகோப் - பாகமதைச் சொல்லுகிறேன் பரிந்துகேளே. (34)

எல்லாமும் நீற்றுதற்கு உபாயங்கேளு - எரிபுளுகு வீரமொடு பூரம்வண்டு, வல்லான ஊரஞ்சூதஞ் சவுக்காரந்தான் - வகையான கார்முகியுஞ் சூடனேடு, நல்லாக யிதுசேரிற் பொருமிநீறும் - நாதாக்கள் சொன்னதிந்த நாட்டப்போக்குச், செல்லாத யிடங்கவிலே செலுத்தாதென்று - செப்பினர் யாகோபு திறமிதாமே. (35)

உண்டான களங்குகள்தான் செய்தபோது - உறுதிபெறப் புடம்போட லாகாதென்று, கண்டவுடன் சரக்கெல்லாஞ் சேர்த்தரைத்துக் - கனிவாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுப், பண்டான சுடர்க்கொடியோன் பலமெடுத்துப்-பதிவாக நாலாகப் பிரிந்துநீயும், முண்டாகக் கொழுத்தியே களங்கையிட்டு - முதிராமலஞ்சுதரம் வாட்டிக்கொள்ளே. (36)

வாட்டியே குகையிலிட்டு உருக்கித்தீரு-வகையாகக் காரமது கூடச்சேர்த்து, கூட்டியே உருக்கிடவே சத்தின்நின்ற - குணமானக் கசடகலும் சிவந்துநிற்கும், தாட்டிகமாய் புகைநீரை விட்டுநீயும், தன்மைபெற நாளெட்டுப் பார்க்கும்போது, நீட்டிவிடும் நீலம்போற் குழம்பாய்நிற்கும் - நேராக வொட்டிடவே யெரித்திடாயே. (37)

நல்லாக யெரித்திடவே உருகிநிற்கும் - நாட்டிலே யிச்செம்பை யெடுக்கக்கேளு, வல்லமையாய்த் துருசினுட செம்புருக்கு - வகையாக இடைக்கிடைதான் கிருசம்போடு, வெல்லவதை யிழுத்திடுங்காண் மட்டஞ்சேரு - விதமாகத் தங்கத்தைச் சேர்த்துவூத, எல்லாமுந் தங்கமாம் நேர்மைபாரு - இதமான யாகோபு யெழுதினரே. (38)

சொன்னபடி செம்புதான் வருகாப்போனல் - சொற்பெரிய வங்கத்தை வெடியுப்பாலே, முன்னமே சொன்னபடி வருத்துச் சேர்த்து - முக்கியமா யுலரவைத்துச் சத்தினேடே, நன்னயமாய்ச் சேர்த்தரைத்து உருக்கித்திரு - நல்லசெம்பு பிடித்திழுக்கு மதியிற்றுக்கு, கன்னல்போல் மதிதன்னிற் றுக்குந்தங்கம்-கனிவாகச் சேர்த்தூதத் தங்கமாமே. (39)

நல்லாகச் சத்தில்நின்ற செம்புதானும் - நாடியே வருகாமற் போனற்கேளு, உல்லாச மானகே சரியைத்தானும் - உத்துமே சட்டியிட்டு உருக்கும்போது, வில்லாகப் புகைநீரிற் பிரிந்துநின்ற உறுதியாய்க் குழம்புதன்னை யதிலேதாக்கு, கல்லாகச் சேர்த்த செம்பை யிழுத்துக்கொள்ளும் - கழிந்துமே மதிதனிலே தாக்கிப்பாரே. (40)

அடுத்துநின்று சேர்த்தசெம்பு மதியிற்றானும் - அடைவாகச் சென்றுபுக்குந் தங்கஞ்சேரு, கொடுத்துருக்கித் தகடுதட்டிப் புடத்தைப்போடு - குணமுள்ள தங்கமிரண் டிடையும்நிற்கும், படுத்துமே போகாது களங்குதங்கம் - பார்கடையில் சொல்லிவிட்டேன் கைபாகந்தான், எடுத்தாக்கா லெப்படியும் பலனுமாகும்- ஏழையாம் வாதிக்குச்சொன்னவாறே. (41)

சத்திலுள்ள செம்பெடுக்க மீயச்செம்பு - சரியான கேசரியு மூன்றுபேரும், நத்திபிடித் தெடுத்துமெடுக் காமற்போனால் - நலமான தங்கமில்லை பிரட்டிமேலோர்க்கு; முத்திபெறச் சத்திலாச் செம்பைச்சேர்த்து-மூவுலகும் மெச்சமதி தன்னிலீந்தால், சுத்திநிற்குந் தீயைவிட்டுச் செம்புதானும் - துரிதமாய்க் கழன்றுவிடுந் திண்ணந் தானே. (42)

களங்குசெய்து புடம்போட்டு யெடுக்கவேண்டாம் - கனிவாகச் சூடனுட தீயில்வாட்டு, உளங்குளிரச் சாகாது உயருமாத்து - உயர்வான லோகமுந்தான் பழுத்துப்போகும், வளங்களாய் வாட்டையிலே நெருப்புமிஞ்சில் - வடிவாக வில்லையது உதித்துப் போகும், தளங்கள்பெற வுறத்தூது நன்றாய்த்தானே - தடையறவே தப்பினாற் கறடுமாமே. (43)

நல்லறிவாய் யுபரசங்கள் நவலோகங்கள் - நாடதிலே பாஷாணங் காரசாரம், சொல்லுமுனே சூதமுதற் செந்தூரிக்கச்-சுருதிபெற மால்தேவி சிலைதான்கெந்தி, கல்லான கெவுரியப் பிரகந்துத்தம் - கடிதான வெடியுப்பு யிவைகள்சேரில், உல்லாச மாகவிது சேர்த்தானாகில் - உண்மையா யெல்லாமுஞ் சிவந்துபோமே. (44)

சாயமா யினச்சரக்கைச் சாற்றக்கேளு-தடையுற்ற வுப்போடு நாகந்தங்கம், மாயமதா யிரும்போடு நிமிளைசூதம் - வடிவுபெறக் கெவுரியுட வர்ணமாகும், நாயமா ரிதையறிந்து சொன்னாரைப்போ- நான்பார்த்து உங்களுக்கு நடத்தைசொன்னேன், காயமது நிலையில்லை கண்டுமுன்னே - கணக்காகச் செந்தூர முண்டுதேறே. (45)

எச்சரக்குங் கட்டவொரு செய்திகேளு - இனியவெடிச் சுண்ணத்தாற் சரக்குக்கட்டும், தசையற்ற திராவகத்தால் சரக்குக் கட்டும் - தற்செயலாந் தயிலத்தாற் சரக்குக்கட்டும், இச்சையுடன் செயநீராற் சரக்குக்கட்டும் - இதமானமெழுகாலே சரக்குக் கட்டும், நச்சரவ மூலிகையாற் சரக்குச்சாகா - நாகரிக யாகோபு நலஞ்சொன்னாரே. (46)

சத்துருக்குங் காலமதைச் சாற்றக்கேளு - சரியான ஐப்பசிக் கார்த் திகையுமாகும், பத்துருக்கு மார்கழியு மிக்காலத்திற் - பதி யவே உருக்கியெடு எனும்புபோலாம், நத்தியே உபசாரங்க ளெல் லாஞ்சுத்தாம் - நலமாக முன்னோர்கள் சொன்னசொல்லை, நித்தி யமும் பார்த்தறிந்தே னிவைகளெல்லாம்-நிதானித்தேன் யாகோபு நிசஞ்சொன்னேனே. (47)

குருமுடிக்குங் காலமது மாசியாகும் - குணமாகும் பைங்குனி யுந் தையுமாகும், வருகுமது செயநீருங் கேணிநீர்போல் - வாகாக யெடுக்கெடுக்க வெள்ளமாகும், திருமுகமாஞ் சரக்கெல்லாங் கட் டுங்காலம் - க்ஷணத்திலே வாதமுமாஞ் செயலோமெத்த, உருக் கினமுங் கட்டினமும் நல்லதாகும் - உளத்துமுறை யாகோபு வோதினரே. (48)

செந்தூரக் காலமது ஆடிமாதம் - சிவந்திடுமா வணிபுரட் டாசிதன்னில், அந்தமுடன் புகைநிற்குங் காலமாகும் - அறிவா யக் காலத்திற் செய்துகொள்ளு, வந்ததொருகாலத்தில் வண்மை யாகும் - வகைகண்டு சரக்குமுதல் சிவந்துநிற்கும், முந்துவினை காலத்திற் செந்தூரத்தை - முனிவாக வுண்டிடவே சித்தியாமே. ()

புடம்போடுந் திட்டங்கள் பேசக்கேளு - பேரான யெரு வொன்று காடையாகும், நடம்போடுங் கவுதாரிப் புடமும்நல்ல- நாடியே யெருமூன்று ஞானிக்குத்தான், விடம்போடு பத்தெரு விற் புடமுமாகும் - விராட்டிதான் ஏனத்தின் செயலுக்குத்தான், கடம்போடு அறைதோறு மமுக்கிநல்ல - கனமாகப் போடவது கணக்குமாமே. (50)

திட்டமா யெருநூறு கனபுடந்தான் - திடமான கெசபுட மும் ஆயிரந்தான், வட்டமா யடுக்கிப்புடம் போட்டெடுத்தால்- வதையாமற் சாரவரும் பரிவுமெத்த, விட்டகுறை வந்தாலோ கிட்டும்பாரு - விடுபடா திருந்தாக்கா லெல்லாம்பாழாம், சட்ட மதா யாராய்ந்து நூல்கள் பார்த்துத் - தாக்கினர் யாகோபு தன் மைதானே. (51)

சுண்ணமது செய்யவென்றால் துருத்தியொன்று - துடியாக ரெண்டானல் உருக்கலாகும், நன்னயமாய்ச் சத்துயென்ற செம் புக்குத்தான் - நாட்டிடுநீ கால்துருத்தி நல்லதாகும், கன்னல்போ லுருகியது சத்துமாகும் - களிம்பறவே யுருக்கிற்பொன் நிறம்போ லாகும், இன்னிலத்திற் பாகமது யியல்புமெத்த - இருந்துரைத் தார் யாகோபு யினியவாக்கே. (52)

பதங்கமது வைப்பதற்கு யெரிப்புக்கேளு - பதியவொரு விறகதுதான் தீபமாகும், விதங்களாம் விறகிரண்டு கமலமாகும். விறகஞ்சாம் விறகுகாடாக் கினியுமாகும், அதங்களாம் முட்டீயு மருளிச்செய்தேன் - அருள்பெருகும் பற்பஞ்செந் தூரமெல்லாம், இதமாக விட்டுவிட்டு யெரிக்கவேண்டாம் - இன்பமாய் யொருவிதமா யெரித்துக்கொள்ளே. (53)

சத்துருக்கும் குகையதனைச் சொல்லக்கேளு - சரியான பொருக்குமண் ணீராறுகும், நத்தியிடும் உமிக்கருக்கு ஆறதாகும்-நலமான கழுதைமலம் ரெண்டதாகும், முத்திடும்வெண் கற்பொடிமா விரண்டினோடு - முனிவான சீலைசுட்ட சாம்பல்ரெண்டு, நித்தியமாய் கடுக்காயின் கஷாயத்தாலே - நிலைக்கவிடு வுரலிலிட்டு மூசைபண்ணே. (54)

பண்ணிடுநீ குகைபண்ணி யதிலேவைத்தும் - பதிவாக உபரசங்கள் உருக்கிப்பாரு, தண்ணீர்போ லுருகுமது குகையும்போகா-தாக்கியெடு கிழியாது உறந்துநிற்கும், விண்ணிலிடி விழுந்தாலு முடையாதப்பா - விரும்பியிந்தக் குகையிலிட வலுவுமெத்த, உண்ணமது உபரசங்கள் சத்துமாகும்-உத்துணர யாகோபு உரைசெய்தாரே. (55)

சொல்லாய்ந்த பெரியோர்கள் சொன்னசொல்லைத் - துறந்தார்கை பாகமதாய்ப் பார்த்துத்தேறி, நல்லாய்ந்து நூல்வளமை கண்டுதேறி, நாட்டினேன் யெழுநூற்றுச் சொட்சமாக, வல்லவர்கள் காண்பார்கள் சாஸ்திரத்தை - வகையில்லார் காணவுமே மாட்டாரென்று, உல்லாச மாகவேதான் வாழ்வீரென்று - உறுதிபெற்ற யாகோபு உண்மைதானே. (56)

ஒருதரத்துக் கிருதரமாய்ப் பார்த்துப்பாகம் - உறுதியொடு பாகம்வரும் மெழுகுமாகும், பெருகுமது பாகம்வந்தா லனேகலாபம் - பெற்றிடுங்காண் ரசவாத வித்தைதானும், திருகுவது வாராமற் செய்துதேறு - திட்டமுடன் வயித்தியங்கள் நன்றாய்ப் பாரு, குருவதுதான் நூலாகும் படித்துத்தேறு - கொட்டினேன் யாகோபு குறிப்புத்தானே. (57)

யாகோபு சூஸ்திரச் சுருக்கம் 57.

முற்றிற்று.

# விளம்பரம்.

## யாகோபு திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | யாகோபு வைத்திய சிந்தாமணி * ... ... | 700 |
| 2 | ஷை வைத்தியம் எழுநூறுக்குச் சுருக்கம் ... | 300 |
| 3 | ஷை சுண்ணம் * ... | 300 |
| 4 | ஷை செந்தூரம் * ... | 300 |
| 5 | ஷை சுண்ணம் 300, செந்தூரம்300க்குசுருக்கம் | 300 |
| 6 | ஷை 300க்குச்சுருக்கம் | 150 |
| 7 | ஷை 150க்குச்சுருக்கம் | 50 |
| 8 | ஷை வைத்தியசூஸ்திரம் * | 150 |
| 9 | ஷை சூஸ்திரச்சுருக்கம் * | 55 |
| 10 | ஷை 9சாஸ்திரத்திற்கும் சூஸ்திரச் சுருக்கம் | 300 |
| 11 | ஷை சாஸ்திரங்கள் யாவுக்கும் இடைபாகம் | 16 |
| 12 | ஷை செய்பாகம் * ... | 16 |

இவரால் இப்பன்னிரண்டுசாஸ்திரங்கள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் இதில் * ஸ்டார் மார்க்குக் கொடுத்திருக்கிற ஆறு சாஸ்திரமட்டும் என்னிட மிருந்ததை இப்பொழுது அச்சிட்டுக்கொண்டு வருகிறேன். மற்றவை அகப்பட்டபின் அச்சிட்டு கூடியசீக்கிரம் வெளியிடுகிறேன்.

## இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | இராமதேவர்வைத்தியம் | 1000 |
| 2 | ஷையார் ஜாலம் ... | 800 |
| 3 | ஷையார் நிகண்டு ... | 500 |
| 4 | ஷையார் கருக்கடை... | 500 |
| 5 | ஷை குருநூல் பரிபாஷை | 300 |
| 6 | ஷையார் சிவயோகம்... | 200 |
| 7 | ஷையார் தண்டகம் ... | 110 |
| 8 | ஷையார் தண்டகபச்சூணி | 109 |
| 9 | ஷையார் பரஞானகேசரி | 100 |
| 10 | ஷை வைத்திய சூஸ்திரம் | 83 |
| 11 | ராமதேவர் சரக்குவைப்பு | 50 |
| 12 | ஷை அஷ்டாங்கயோகம் | 50 |
| 13 | ஷை முப்புசூஸ்திரம்... | 31 |
| 14 | ஷைபரிபாஷைசூஸ்திரம் | 27 |
| 15 | ஷையார் ஞானத்திறவு | 16 |
| 16 | ஷை குருநூல் சூஸ்திரம் | 16 |
| 17 | ஷையார் பூஜாவிதி ... | 10 |
| 18 | ஷையார் ஞானம் ... | 10 |
| 19 | ஷையார் ஞானம் ... | 5 |
| 20 | ஷையார் வைத்தியம்... | 6 |

இந்த சாஸ்திரங்கள் என்னிடம் ஓலையேட்டுப் பிரதிகள் அகப்பட்டு அச்சிட்டுக்கொண்டு வருகிறேன்.

எமது புஸ்தகஷாப்பில் இன்னும் வேண்டும் புத்தக தினுசுகள் தயாரிலிருக்கிறது. வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமாயும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

# புத்தக விளம்பரம்.

இதனால் சகலகனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்: அடியிற்கண்ட புஸ்தகங்களெல்லாம் அச்சிட்டுத் தயாராயிருகி றது வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசதாரிடம் எழுதி வி.பி யிலாவது நேரிலாவது கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

1. அகஸ்தியர்பரிபூரணம் ௨௱௫ம் அதன்சூத்திரம்௨௧ம் 0—4—
2. ஷை பூரணச்சூத்திரம் ௨௱௰௬... ... ... 0—4—
3. ஷை வைத்தியத்தின் சுருக்கம் உரையுடன் ... 0—8—
4. பரிபாஷை ௩௱ வெளிவராதது... ... ... 0-10-
5. ஷை செந்தூரம் ௩௱ ... ... ... ... 0—8—
6. ஷை அமுத கலைக்யானம் ௲௨௱ ... ... 1—0—0
7. ஷை வைத்திய காவியம் ௲௫௱ ... ... 0-12—0
8. சட்டை முனிவர் முன்ஞானம் பின்ஞானம் ௨௱ 0—4—0
9. பிர்மமுனிவர் வைத்தியம் ௩௱௮௰ ... ... 0—8—0
10. புலிப்பாணி வைத்தியம் ௫௱ உரையுடன் ... 0-10—0
11. இராமதேவர் சிவயோகம் ௨௱ ... ... ... 0—4—0
12. சுப்பிரமணியர் ஞானம் ௨௱ ... ... ... 0—4—0
13. ஷை ஞானம் ௫௱ ... ... ... ... 0-12—0
14. உரோமரிஷி பரிபாஷை ௩௱ வெளிவராதது ... 0-12—0
15. நந்திகருக்கடை ௩௱ ... ... ... ... 0—8—0
16. யூகிமுனிவர் வைத்தியம் ௮௱ ... ... ... 0-12—0
17. தெட்சணாமூர்த்தி திருமந்திரம் 1500 ... ... 1—8—
18. யாக்கோப் சுண்ணம் 300 ... ... ... 0-12—
19. ஷை வைத்தியம் 150-ம் சுருக்கம் 50ம் ஆ 200... 0—6—
20. ஷையார் செந்தூரம் 300 ... ... ... 0-12—
21. கெருடாருடம், கெருடபஞ்சாட்சரஆரூடம், சத்தியாரூடம், சிவாரூடம், தேவியாரூடம், நாகராரூடம், சித்தராரூடம், சற்பாரூடம், மந்திராரூடம், முதலிய ஒன்பது விஷ, மந்திர ஆரூட வைத்தியம், சக்கரங்களுடன் ... ... ... ... 1—8—
22. யோகஞான சாஸ்திரத்திரட்டு. ஒன்பது பாகம் வரை முடிந்திருக்கிறது. 1-வது திருமூலர் சுப்பிரமணியர் கோர்வையும், 2-வது போகர் காலாங்கி கோர்வையும், 3-வது கண்டப்பிள்ளை புசுண்டர் கோர்வையும், 4-வது மச்சமுனி கோர்வையும், 5-வது சுந்தரானந்தர் கோர்வையும், 6-வது இராமதேவர் தன்வந்திரி கோர்வையும், 7-வது சட்டைமுனிகோர்வையும், 8வது உரோமரிஷிகோர்வையும், 9-வது கருவூரார் கோர்வையுமாக அச்சிட்டிருக்கிறது பாகம் 1க்கு 1—0—

இ. ராம. குருசாமிக் கோன்,

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை